# இரவி

## கலை இலக்கிய காலாண்டுக் கதிர்

சித்திரை ~ ஆனி 2025 கதிர் ~ 4 வெளியீடு: இரவி சஞ்சிகை இலங்கை





**இலங்கை கொழும்பில் 4வது ஹைக்கூ மாநாடும்**

**இனிய நந்தவனம்**

**சந்திரசேகரனின் ஹைக்கூ நூல் வெளியீடும்**

# குரு அரவிந்தன் வாசகர் வட்டம் நிகழ்த்தியதிறனாய்வுப் போட்டி 2025 முடிவுகளும் வெற்றியாளர்

கனாடாவில் வசித்துவரும் தமிழ் இலக்கிய உலகில் ஆழமாக தனது தடங்களை பதித்து சிறந்த ஆளுமையாக வலம்வரும் எழுத்தாளர் பன்முக ஆளுமை குரு அரவிந்தன் அவர்களின் வாசகர் வட்டம் வருடாந்தம் நடாத்துகின்ற திறனாய்வுப் போட்டி 2025இலும் இடம் பெற்றது. தற்போது அந்தப்போட்டியில் பஞ்குபற்றி வெற்றியீட்டிய வெற்றியாளர்களின் விபரமும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதனைப்பற்றிய விபரங்கள் கீழே தெளிவாக தரப்படுகிறது. பங்குபற்றி வெற்றியீட்டிய அனைத்து வெற்றியாளர்களுக்கும் இரவி மின் இதழும் தன்னுடைய வாழ்தை தெரிவிக்கின்றது

இங்ஙனம்

பிரதம ஆசிரியர்

**இரவி மின் இதழ்**

**2025 ஆண்டு திறனாய்வுப் போட்டி- 3 இல் பரிசு பெற்றவர்களின் விவரம்:**

இந்தப் போட்டிக்கு 134 திறனாய்வுக்கட்டுரைகள் இந்தியா, இலங்கை, பிரித்தானியா, மலேசியா, பிரான்ஸ், ஜெர்மனி, டென்மார்க், அவுஸ்ரேலியா, கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் இருந்து கிடைத்திருந்தன. எல்லாக் கட்டுரைகளும் சிறப்பாகவே இருந்தன. ஆனாலும் இறுதிச்சுற்றுக்காகப் 18 கட்டுரைகள் தெரிவாகி, அவற்றுக்குப் பரிசுகள் கிடைத்திருக்கின்றன. பரிசுகள் காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கப்படும்.

போட்டியின் நடுவர்களாகப் பேராசிரியர் கரு முத்தயா (தமிழ்நாடு), ஆய்வாளர் முனைவர் வாசுகி நகுலராஜா (கனடா), ஆய்வாளர் டாக்டர் மேரி கியூரி போல் (கனடா), எழுத்தாளர் கே. எஸ் சுதா-கர் (அவுஸ்ரேலியா) ஆகியோர் பணியாற் றினார்கள். இவர்களுக்கும் பங்குபற்றியவர்களுக்கும் எங்கள் நன்றி உரித்தாகுக.

முதலாம் பரிசு: சிவகலை சிவப்பிரகாசம், வவுனியா, இலங்கை.

இரண்டாம் பரிசு: சகோதரி அருள் சுனிலா, தேனி, தமிழ்நாடு.

மூன்றாம் பரிசு: மரு.வெ. மாலாபாரதி. ஆரணி. தமிழ்நாடு.

நான்காம் பரிசு: வரதராஜன் ஜூனியர்தேஜ் சீர்காழி, தமிழ்நாடு.

ஐந்தாம் பரிசு: (1) திவானி கந்தசாமி, வவுனியா, இலங்கை.

(2) சீ. கவிதாராணி, பாசறை, இலங்கை.

பாராட்டுப்பரிசுகள்: சிவநேஸ் ரஞ்சிதா, கெக்கிராவ. இலங்கை. எஸ். ராமேஸ்வரன், கொழும்பு -5. திருமதி பவானி சச்சிதானந்தன், வத்தளை, இலங்கை. பி.பி. புஸ்பராஜா, கொழும்பு -1. சந்திரகௌரி சிவபாலன், ஜெர்மனி. சிந்துஜா சிவகுமார், அவுஸ்ரேலியா. த.வேல்முருகன், ஈரோடு, தமிழ்நாடு. க.பூமணி, சென்னை, தமிழ்நாடு. இக்பால் அலி, பரகஹதெனியா, இலங்கை. விமலாதேவி புசுப்பநாதன், ரொறன்ரோ, கனடா. தீபரதி குபேந்திரன், வாணியம்பாடி, தமிழ்நாடு. பன்னீர்ச்செல்வம் கருப்பையா, கோலாலம்பூர், மலேசியா.

சுலோச்சனா அருண்

செயலாளர், குரு அரவிந்தன் வாசகர் வட்டம்

# இரவி

**கலை இலக்கிய**
**காலாண்டு இதழ்**

**பிரதம ஆசிரியர்: நரேஸ் நியூட்டன்**

**கதிர் 04**

**சித்திரை - ஆனி 2025**

உங்கள் படைப்புகளை அனுப்ப:

**iravi.magazine@gmail.com**

உதவி ஆசிரியர்: அரவிந்தன்

இந்த இதழில் வெளியிடப்படும் சகல ஆக்கங்களுக்கும் அதனை எழுதியவர்களே பொறுப்புடையவர்களாவர் என்பதை இத்தால் அறியத் தருகிறேன்.

சகல ஆக்கங்களும் பாமினி யுனிக்கோட் எழுத்துருவில் தட்டச்சு செய்யப்பட்டு மென் பிரதியாக மின் அஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும். தங்கள் பெயர் முகவரி மற்றும் புகைப்படம் ஆக்கத்துடன் அனுப்பி வையுங்கள்

புதுக்கவிதை

மரபுக் கவிதை

கட்டுரைகள்

சிறுகதைகள்

தொடர் கதைகள்

நேர் காணல்கள்

நூல் அறிமுகம்

நூல் ஆய்வு

சிரிப்பதற்கும் சிந்திப்பதற்கமான விடையங்கள்

ஓவியங்கள் போன்றவை வரவேற்கப்படுகின்றன. எழுதி எமது மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்.

## இந்த இதழை தங்கள் படைப்புகளால் அலங்கரித்த ஆளுமைகள்




















# இரவி

## கதிரின் உள்ளே....


**கதிர் வீச்சு**

**கட்டுரை**

**புத்தனுக்காய் காத்திருக்கும் போதிமரங்கள்** - இனிய நந்தவனம் சந்திரசேகரனின் ஹைக்கூ கவிதைகளை அனுபவித்தல்

**மடலேறுதல்** - (ஒரு பார்வை)

**ஈழத்தில் வெளிவந்த தமிழ்த்திரைப்படங்கள் ஒரு தேடல்**

**மீண்டும் ஓநாய்களின் ஊளைச்சத்தம்**

**நாளை உலகை**

**சிறுகதை**

**அவனுக்கென்றோர் மனம்**

**மழை**

**கறிவேப்பிலை**

**மடை கடந்த மௌனம்**

**பத்தி**

**வடதுருவத்தில் ஒரு எரிமலைத்தீவு**

**தீப்பந்தம் - ஈழத்தின் முழு நீளத் திரைப்பட வெளியீடு**

**கவிதைகள்**

**பழைய பஞ்சாங்கம்**

**ஐக்கியமே பலம்**

**பகைவனுக்குமருள்வாய் நன்நெஞ்சே**

**அமைதி திரும்பட்டும்**

**பசுமை - மரபுக் கவிதைகள் நேரிசை வெண்பா**

**பசுமை காப்போம்**

**தன் முனைக் கவிகள்**

**துளிப்பாக்கள் (ஹைக்கூ)**

**தொடர் நவீனம்**

**கரிசல் மண்ணில் ஒரு காவியம்** - பாகம் - 2

**நிகழ்வுகள்**

**பாவலர்களுக்கு மதிப்பளிப்பு**

# இரவி

**கதிர் வீச்சு....4**

**உ**லகெங்கும் பரந்து தமிழ் தாயக மண்ணின் வாசம் மறையாது தமிழ் வளர்த்து நம்மொழியை நிலைக்கச் செய்து வாழும் அனைத்து தமிழ் நெஞ்சங்களுக்கும், அதேபோலவே தமிழை நேசிக்கும் ஏனைய அனைத்து மக்களுக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நற்றமிழ் வணக்கம்! எமது அடுத்த இதழுடன் உங்களை சந்திப்பதில் மட்டற்ற மகிழ்சியடைகிறோம்.

**இரவி** மின் இதழின் முன்னைய இதழ்கள் வெளிவந்து அநேகமான மக்களைச் சென்றடைந்தது மகிழ்சியை அளிக்கிறது. அத்துடன் அவர்களிடமிருந்து கிடைக்கும் பாராட்டுகளும் எமக்கு மன மகிழ்ச்சியைத் தருவ-தோடு மென்மேலும் ஊக்கமளிக்கிறது. அந்த ஊக்கத்தோடு தொடர்ந்து முன்நோக்கி சென்று உங்கள் அன்பும் ஆதரவும் எப்போதும் எமக்கு இருக்கும் என்ற நம்பிக்கையோடு **இரவி**யின் அடுத்த இதழுடன் தற்போது உங்களை நோக்கி வருகிறோம்.

நாங்கள் எமது சஞ்சிகையில் மூத்த ஆளுமைகளுக்கு இடம் தருவதோடு புதிய படைப்பாளர்களையும் ஊக்குவித்து அவர்களுக்கும் இடம் தருகிறோம். இதனால் புதிய பல கவிஞர்களையும், எழுத்தாளர்களையும், கதாசிரியர்களையும், ஆய்வாளர்களையும் ஊக்குவித்து சஞ்சிகைக்கூடாக அறிமுகம் செய்கிறோம். இது எமக்கு மனத் திருப்தியையும் மகிழ்ச்சியையும் தருகிறது. இது மேலும் பல ஆளுமைக-ளின் கரங்களுக்கு செல்ல வேண்டும் அவர்களும் எமது சஞ்சிகையில் தங்கள் படைப்புகளை வெளியிட வேண்டும் என்பது எங்கள் விருப்பம். அத்தோடு மேலும் பல வாசகர்களையும் சென்றடையவேண்டும். அதன் மூலம் எமது வாசகர் வட்டம் மேலும் விரிவடையவேண்டும். அதனை நிறைவேறச் செய்ய வேண்டியது உங்கள் ஒவ்வொருவரினதும் பொறுப்பாக நாம் உணர்கிறோம். அதனை நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கையும் எமக்கு உண்டு.

இரவியை ஆரம்பித்தது முதல் இதுவரை நாம் சந்திக்கின்ற இடர்பாடுகளை பார்க்கும்போதெல்லாம் நினைவுக்கு வருபவர் ஆளுமை மல்லிகை ஜீவா என்ற அழைக்கப்படும் டோமினிக் ஜீவா அவர்களே. அவரது சஞ்சிகை ஆரம்பித்த காலங்களில் அதனை அச்சேற்றி வாசகர்களிடத்தில் கொண்டு சேர்ப்பதில் பாரிய சவால்களை எதிர்கொண்டவர் அவர் என்பது அனைவரும் அறிந்த விடயம்.

ஒரு நாள் நான் வீதியல் வந்துகொண்டிருந்தபோது, ஒரு மனிதர் சறத்தோடு அச்சு அழுத்தும் இயந்திரத்தை காலால் மிதித்து மிதித்து ஒவ்வொரு பேப்பராக வலது பக்கத்தில் இருந்து எடுத்து இயந்திரத்திற்குள் கொடுத்து மீண்டும் இடது கையால் வெளியே எடுத்து இயந்திரத்தின் இடதுபுறமுள்ள தட்டில் வைத்துக்கொண்டிருந்தார். அதனை சற்று நேரம் அமைதியாக நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தேன். அன்றுமுதல் அந்த வீதியால் சென்று வரும்போதெல்லாம் அந்த இடத்தை நின்று பார்த்துவிட்டே வருவேன்.. சிலசந்தர்ப்பங்களில்  அதே வேலையையும் சிலசந்தர்ப்பங்களில் அச்சுப்பதிப்பு செய்யப்பட்ட அந்த பேப்பர்களையெல்லாம் ஒன்று சேர்த்து ஒரு வெளிப்பக்க அட்டையை எடுத்து வைத்து அதனை கம்பிக்கட்டுக் (ஸ்ரேப்லர்) கை இயந்திரம் மூலம் கட்டுப் போட்டுக்கொண்டிருப்பார். இதனை பல தடவைகள் பார்த்திருக்கிறேன்.

இன்னும் சில சந்தர்ப்பங்களில் துணிப்பொதியொன்றை (இது முன்பு பலருடைய பயன்பாட்டில் இருந்த பொதி, துணியால் தைக்கப்பட்டு தோளில் அதை சுமக்கக்கூடிய வகையில் பட்டி ஒன்று தைக்கப்பட்டிருக்கும்) தோளில் சுமந்தபடி வீதியால் நடந்து செல்வதைப் பார்த்திருக்கிறேன். இப்படித்தான் ஒரு தடவை வேறொரு நபருடன் தன்னுடைய பொதியில் இருந்து புத்தகம் ஒன்றை எடுத்து அதை அவ ரிடம் காட்டி சற்று நேரம் கதைத்துக்கொண்டிருந்தார். அது ஒரு பொது இடம். அந்த சந்தர்ப்பத்தில்தான் அவர்தான் மல்லிகை இதழின் ஆசிரியர் டோமினிக் ஜீவா என்பதை அறிந்துகொண்டேன். எப்போதும் நீளமான வெள்ளை சட்டையும் (அதை நாசனல் என்று கூறுவார்கள்) வெள்ளை சாரமும் அணிந்துதான் எங்கும் செல்வார். அந்த சந்தர்ப்பத்தில்தான் அவர் பொதியிலிருந்து எடுத்துக் காண்பித்தது

*மல்லிகை இதழ் என்பதையும், இப்படித்தான் அந்த இதழை வாசகர்களிடம் கொண்டு சேர்ப்பது அவர் வழக்கம் என்பதையும் அறிந்தேன்.*

*மேலே நான் குறிப்பிட்ட சம்பவம் மிகவும் ஆச்சரியமாக இருந்தது. இப்படியும் ஒரு நபர் முழு நேரத்தையும் காலத்தையும் செலவு செய்து சஞ்சிகை வெளியீட்டுக்கான, அச்சுக்கோர்ப்பிலிருந்து சகல பணிகளையும் தானே மேற்கொண்டு தனது சஞ்சிகையை வாசகர்களிடம் கொண்டுபோய் சேர்ப்பாரா என்று. அச்சுக்கோர்ப்பு என்பதெல்லாம் மிகவும் சிரமமான பணி. தற்போது கணணி யுகத்தில் இருக்கும் இளையோருக்கு இப்பணிபற்றி முழுமையாக தெரிந்திருக்க வாய்ப்பில்லை. காரணம் ஏறத்தாழ இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பே கணணி பயன்பாட்டுக்கு வந்துவிட்டது. தற்போது முப்பது வயதை அடைந்துவிட்டவர்கள் பெரும்பாலானோர் அச்சுக்கோர்ப்பு முறை நடைமுறையிலிருந்த அச்சகப்பணிபற்றி அறிந்திருப்பது அரிதாகவே இருக்க வாய்ப்பிருக்கிறது. ஒரு நீளமான இரண்டு அங்குல உயரமான பெட்டி அதில் சிறிய சிறிய அறைகள் போன்று பிரிக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு அறைகளுள்ளும் ஒவ்வொரு எழுத்து இருக்கும். அதை ஒரு கையடக்கமான பித்தளை அல்லது வெள்ளிரும்பினாலான ஒரு அச்சை கையில் வைத்துக்கொண்டு கையெழுத்துப்பிரதிகளை வாசித்து அதற்கமைவாக ஒவ்வொரு எழுத்தாக எடுத்து அந்த அச்சிலே அடுக்கவேண்டும். அது மூன்று அங்குலம் உயரமான அச்சு என்பதால் அந்த உயரத்துக்கு மட்டுமே அடுக்க முடியும். பின்னர் அடுக்கப்பட்ட எழுத்துக்கோர்வையை குலைந்து போகாமல் பெரிய தட்டில் எடுத்து வைக்கவேண்டும். பின்னர் அவற்றை பக்கங்களாக ஒழுங்குபடுத்தவேண்டும். அப்படி அது ஒரு பெரிய சவாலான விடயம். இவற்றையெல்லாம் டோமினிக் ஜீவா அவர்கள் செய்து தனது சஞ்சிகையை வளர்திருக்கிறார் என்பது எத்தனைபேருக்கு தெரியுமோ தொியாது. அவ்வளவு சவால்களையும் கடந்து அவர் உடல்நலக் குறை ஏற்பட்டு ஓய்வில் இருக்கும் காலம்வரை சஞ்சிகையை குறிப்பிட்ட காலத்தில் வெளியிட்டுக்கொண்டே இருந்தார்.*

*ஆளுமை டோமினிக் ஜீவா அவர்கள் முகம்கொடுத்த சவால்கள் எமக்கு ஒரு சிறந்த படிப்பினையாகவும் வழிகாட்டுதலாகவும் இருக்க நாமும்* ***இரவி*** *சஞ்சிகையை பல சவால்களுக்கு முகம்கொடுத்த வண்ணம் வெளியிட்டு வருகிறோம். நாம் எதிர்பார்ப்பதெல்லாம் நல்ல படைப்பாளர்கள் எமது சஞ்சிகையுடன் இணைந்து தங்கள் படைப்புகளை சஞ்சிகை மூலம் வெளியிட முன்வரவேண்டும். அதேபோல் சஞ்சிகை இலவசமாகவே அனைவருக்கும் அனுப்பிவைக்கப்படுகிறது அதனை ஏனைய தங்கள் நட்புவட்டத்தில் இருப்பவர்களுடனும் பகிர்ந்து எமது வாசகர் எண்ணிக்கையையும் படைப்பாளர் எண்ணிக்கையயம் அதிகரிக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும். மேலும் தட்டச்சு பணி, பக்க வடிவமைப்புப்பணி, ஓவியங்கள் வரைதல் போன்ற பல செயற்பாடுகள் எந்தக்கொடுப்பனவுமே இன்றித்தான் மேற்கொள்ளப்படுகிறது. அதற்கு சிறிய அளவிலான கொடுப்பனவையாவது மேற்கொள்ளும்போது தடை மற்றும் காலதாமதமின்றி எமது வெளியீட்டை மேற்கொள்ளமுடியும். ஆகவே இந்த விடயங்களில் எம்முடன் அனுசரணையாளர்களாகவோ, விளம்பரதாரர்களாகவோ, நன்கொடையாளர்களாகவோ தாங்களாகவே முன்வந்து இணைந்துகொள்ள விரும்புபவர்கள் இணைந்து தங்கள் பங்களிப்பை வழங்க முன்வரலாம் என்பதை தங்களுக்கு அன்படன் அறியத்தருகிறோம்.*

*மேலும் மாணவர்களுடைய படைப்பாற்றலை மேம்படுத்தும்பொருட்டு அவர்களுக்கான வாய்ப்பையும் வழங்க ஆயத்தமாக இருக்கிறோம். ஆகவே மாணவர்கள் தங்கள் படைப்புகளை எமக்கு எழுதி அனுப்பினால் அவை ஆய்வுசெய்யப்பட்டு வெளியீடு செய்யப்படும். இதற்கான ஊக்கத்தை எமது சஞ்சிகையை மாணவர்களிடமும் பாடசாலைகள் மத்தியிலும் பகிர்ந்து அவர்களை பல்வகையான ஆக்கங்களை எழுதுவதற்கு ஊக்கப்படுத்துவதன் மூலம் அவர்களது இலக்கிய ஆற்றலையும் பங்களிப்பையும் வளர்த்தெடுக்கமுடியும். இதனை வாசகர்களாகிய நீங்கள் செய்வீர்கள் என எதிர் பார்க்கிறோம்.*

*சரி நண்பர்களே. இப்போது இந்த இதழ் உங்கள் கரங்களில். இதனை படியுங்கள் உங்கள் ஆக்கபூர்வமான இதழின் வளர்ச்சிக்கான ஆலோசனைகளை எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். மேலும் பல சிறந்த படைப்புகளுடன் எமது அடுத்த இதழில் சந்திக்கும்வரை அனைவருக்கும் நன்றி கலந்த நற்றமிழ் வணக்கம் கூறி விடைபெறுகிறேன்.*

***இவ்வண்ணம்***

***பிரதம ஆசிரியர்***

***நரேஸ்***

# புத்தனுக்காய் காத்திருக்கும் போதிமரங்கள்

## இனிய நந்தவனம் சந்திரசேகரனின் ஹைக்கூ கவிதைகளை அனுபவித்தல்

– நரேஸ் நியூட்டன் –

**த**மிழகத்திலிருந்து அண்மையில் ஈழத்தேசத்திற்கு வருகைதந்து **'ஹைக்கூ'** கவிஞர்களை ஒன்று சேர்த்து ஹைக்கூ 4வது மாநாட்டை சிறப்பாக நடாத்திய இனிய நந்தவனம் சந்திரசேகரனின் படைப்புதான் **'புத்தனுக்காய் காத்திருக்கும் போதி மரங்கள்'** என்ற ஹைக்கூ கவிதைகளின் தொகுப்பு.

யார் இந்த சந்திர சேகரன்….? அவரைப்பற்றி நான் அறிந்த விடயங்களுள் சில விடயங்களை மட்டும் உங்களோடு பகிர்ந்துகொள்கிறேன். இவர் இலங்கையின் வடமாகாண மாவட்டங்களுள் ஒன்றாகிய வவுனியா மாவட்டத்தில் 1971ஆம் ஆண்டு ஆவணி மாதம் 21ஆம் திகதி சின்னப்புதுக்குளம் என்று அழைக்கப்படும் ஒரு சிற்றூரில் பிறந்தவர். கோவில் புதுக்குளம் என்ற மற்றொரு சிற்றூரில் வளர்ந்து அங்குள்ள ஆரம்ப பாடசாலை ஒன்றில் தனது ஆரம்பக் கல்வியை தொடர்ந்தார். பின்னர் 1981ஆம் ஆண்டு இலங்கையில் தொடச்சியாக இருந்த உள்நாட்டு யுத்த சூழ்நிலை காரணமாக தாயகத்திலிருந்து தமிழகத்திற்கு புலம் பெயர்ந்து திருச்சி மாநாகரில் வாழந்துவருகிறார்.



தமிழகத்திலே தனது கல்வியைத் தொடர்ந்த சந்திரசேகரன் அங்கு உயர்கல்வியை முடித்துக்கொண்டு இந்திய வேதியியல் நிறுவனத்தின் விற்பனை முகாமையாளராக பணிபுரிந்தார். இவரது இலக்கிய ஆர்வம் சிறுவயதிலிருந்தே இவரோடு கூடவே வளர்ந்தது ஆனாலும் இவரது முதலாவது கவிதைப்படைப்பு 1990ஆம் ஆண்டில் திருச்சி மாநகரில் வெளிவந்து கொண்டிருக்கும் **'புதிய தோணி'** எனும் சஞ்சிகையில் வெளிவந்தது முதல் ஆரம்பிக்கிறது. அதன் பின்னர் அவரது இலக்கிய ஆர்வம் இன்னும் பல சிறப்புச் சாதனைகளை தமிழ் இலக்கியத்துறையில் படைக்கத் தூண்டவே, நீண்ட காலமாக இருந்துவந்த சஞ்சிகை ஒன்றை ஆரம்பிக்கவேண்டும் என்ற எண்ணம், நான்கு பக்கங்கள்கொண்ட சஞ்சிகையாக 1997ஆம் ஆண்டு தை மாத்தில் **'இனிய நந்தவனம்'** என்ற பெயரில் துளிர்த்தது. அந்த துளிரே இன்று 25 ஆண்டுகளைக் கடந்து இனிய நந்தவனம் என்ற விருட்சமாய் வளர்ந்து தமிழ் நிழல் பரப்பி நிற்கிறது.



இவருடைய இலக்கிய ஆர்வத்தால் பல்வேறு வகையான நிகழ்வுகளை அதற்காக

செயல்படுத்திவருகிறார். அவற்றுள் வெவ்வேறு விடயங்களில் சாதனைகளை நிகழ்த்தும் சாதனையாளர்களை பாராட்டி மதிப்புரவு செய்து



விருதுகளை வழங்குவதில் தானும் மகிழ்ந்து மற்றவர்களையும் மகிழ்விப்பதோடு நிறைவான ஊக்கத்தை வழங்குகிறார். தமிழ் இலக்கிய வளர்சியில் இவர்காட்டுகின்ற ஈடுபாடு காரணமாக பல்வேறு இலக்கிய நிகழ்வுகளை நிகழ்தும் இவர், ஹைக்கூ கவிதை வளர்ச்சியலும் தனது ஆர்வத்தை காட்டத்தொடங்கினார். இதன் பயனாக உருவாகியதே ஹைக்கூ கவிதைகளுக்கு மட்டுமே யான **'தூண்டில்'** சஞ்சிகை மற்றும் ஹைக்கூ மாநாடு. இந்த மாநாட்டை நான்கு வருடங்களாக வெவ்வேறு இடங்களில் நடாத்திவருகிறார். அதன்பொருட்டு 2025ஆம் ஆண்டிற்கான ஹைக்கூ மாநாட்டை ஹைக்கூ கவிஞர்கள் பேரவையையும் இலங்கையில் செயற்படுகின்ற கொழும்பு தமிழ்ச் சங்கத்தையும் இணைத்துக்கொண்டு அண்மையில் கொழும்பு மாநகரில் அமைந்திருக்கும் கொழும்பு தமிழ்சங்க மாநாட்டு மண்டபத்தில் நடாத்தி முடித்தார். இந்த நிகழ்வில் இலங்கை, மலேசியா மற்றும் இந்தியாவைச் சார்ந்த பல ஹைக்கூ கவிஞர்களும் பெரியோரும் கலந்து சிறப்பித்தமை சிறப்பம்சமாகும்.

இந்த நிகழ்வில் ஈழத்தில் ஹைக்கூ கவிதையை முதன் முதலில் தனது கவிதைப் படைப்பில் புகுத்தி **'கூடைக்குள் தேசம்'** என்ற பெயரோடு முதலாவது ஹைக்கூ கவிதைத் தொகுப்பை வெளியிட்டவராக கருதப்படுகின்ற கவிஞர் சு. முரளிதரன் அவர்கள் மதிப்புரவு செய்யப்பட்டமை மிகச் சிறந்த ஒரு செயற்பாடக அமைந்தது. அது மட்டுமன்றி பல ஹைக்கூ கவிஞர்களின் ஹைக்கூ கவிதைத் தொகுப்புகள் இந்த நிகழ்வின்போது வெளியிட்டு வைக்கப் பட்டமை நிகழ்விற்கு மேலும் சிறப்பூட்டியது. இந்த நிகழ்விலேயே குறிப்பிட்ட மாதத்திற்கான **தூண்டில்** மற்றும் **இனிய நந்தவனம்** சஞ்சிகைத்தொகுப்பு போன்றவை வெளியிடப்பட்டதோடு மிகவும் விசேட- மான நிகழ்வாக நந்தவனம் சந்திரசேகரனின் **'புத்தனுக்காகக் காத்திருக்கும் போதி மரங்கள்'** என்ற ஹைக்கூ தொகுப்பு நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டிருந்தது. இதனோடு இலங்கை இந்திய கவிஞர்களின் ஹைக்கூ சார்ந்த அனுபவப்பகிர்வு, ஹைக்கூ கவிதை வாசிப்பு போன்ற நிகழ்வுகளேடு பிரமுகர்கள் மதிப்பளிப்பும் அவர்களின் உரை களும் நிகழ்ந்து விழாவை மெருகூட்டி சிறப்படை யச் செய்திருந்தன. நானும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு என்னால் எழுதப்பட்ட ஹைக்கூ கவிதைகள் சிலவற்றை படித்தமை எனது வாழ்க் கையில் மறக்கமுடியாத ஒரு வரலாற்று பதிவாக இருக்கும் என்ற மகிழ்ச்சியில் திளைத்தேன்.

மேற்சொன்னவை சந்திரசேகரனும் ஹைக்கூ மாநாடு பற்றியதுமான ஒரு சிறு குறிப்பு மட்டுமே. தொடர்ந்து சந்திரசேகரன் புத்தனுக்காய் காத்திருக்க வைத்த போதி மரங்கள் என்ன சொல்கின்றன என்பதை பார்ப்போம். இது இவருடைய இரண்டாவது ஹைக்கூ தொகுப்பு. இக்கவிதைத் தொகுப்பு ஹைக்கூ மாநாட்டின்போது வெளியீடு செய்து வைக்கப்பட்டது. அப்போது நானும் இதன் பிரதியை வாங்கியமை பெருமையே. உலகத்தமிழ்ச் சிற்றிதழ்களின் சங்கத்தின் தலைவர் தமிழ்ச்செம்மல் வதிலை பிரபா




அவர்களின் அணிந்துரையுடன் ஆரம்பிக்கிறது இந் நூல். இதில் உள்ள ஹைக்கூகள் இனிமை யானவை சென்ரியூகள் வலிமையானவை என்ற பொழிப்பிற்கூடாக இந்தத் தொகுப்பின் சிறப்பை மிக அருமையாக ஆரம்பத்திலேயே சுட்டிக்காட்டிச் செல்கிறார் அவர். நூலை ஒரு தடவை எடுத்துப் பார்ப்போம் என கையிலெடுத்து வாசிக்கத்

தொடங்கிய நான் வைக்க மனமின்றி அந்த நிகழ்வின்போதே இரண்டு தடவைகள் படித்து முடித்தேன் என்றால் பாருங்கள். அதுதான் இந்த கவிதைகளின் வலிமை என்று வதிலை பிரபா அவர்கள் குறிப்பிட்டமை சான்றாக அமைகிறது.

சென்றியூ கவிதைகளுக்கு இருக்கும் அபரிமிதமான சக்திதான் ஒருவர் சொல்ல நினைக்கின்ற ஒரு கருத்தை பயமின்றி மூன்று வரிகளுக்குள் சொல்லி முடித்துவிடலாம். அதை மிகவும் அவதானமாகவும் துணிச்சலுடனும் பல கவிதைகளில் கவிஞர் சந்திரசேகரன் சொல்லி



யிருக்கிறார். நூலில் இருக்கக்கூடிய ஒவ்வொரு கவிதைகளும் ஒவ்வொரு விடயத்தை பிரதிபலிக்கத் தவறவில்லை. பெற்றோல் எரிபொருளின் தடையற்ற தொடர்ச்சியான விலையேற்றத்தை மிகத் தத்ரூபமாக இந்தக்கவிதையில் குறிப்பிடுகிறார்.

இறங்குவதே இல்லை
வயதைப் போலவே
பெற்றோலின் விலை

அடுத்து மற்றொரு கவிதையை இப்படி அமைக்கிறார். இதிலே பல மரணங்கள் நிகழ்ந்திருக்கின்றன. ஏதோ பெரிய பிரச்சனையாக இருக்குமோ? அதனால்தான் மனிதக்கூட்டம் அலைமோதுகிறதோ என்று எண்ணுவதற்குள் கவியை சட்டென வேறுவிதமாக முடித்திருக்கிறார். இது ஹைக்கூவின் சென்றியூ கவிகளுக்கேயுரிய ஒரு தனிச் சிறப்பு. அதனை மிகச்சிறப்பாக வெளிப்படுத்தியிருக்கிறார்.

குவியல் குவியலாய் மரணம்
அலை மோதும் மனிதக்கூட்டம்
மீன் சந்தை

மற்றொரு கவிதையை சாதி பாகுபாட்டை எல்லோரும் சமம் என்பதை வலுயுறுத்தும் படிக்கு இப்படி அமைத்திருப்பார். இந்தக் கவிதையில் பணம் என்று வருகின்றபோது அங்கு சாதி வேறுபாடு முன்னுரிமைப்படுத்தப்படுவதில்லை என்பதை இந்து ஆலய அர்ச்சனைத்தட்டை முன்நிறுத்தி எழுதியிருக்கிறார் இப்படி.

அனைத்து சாதியும் சமம்
அர்ச்சகர் தட்டில் விழும்
காசுகள்

எவ்வளவு பெரிய விடயத்தை, ஆழமான மிகப்பெரிய தத்துவார்த்தமான கருத்தை ஒரு விதமான சலனமும் இன்றி தனது வரிகளுக்குள், மூன்றே வரிகளுக்குள் புதைத்துவிட்டிருக்கிறார் அந்தக்கவிதையில். இது சாதாரணமாக வரக்கூடிய ஒரு கவிதையல்ல. நீண்டகாலமாக அவதானிக்கப்பட்டு மனதுக்குள் உறுத்திக்கொண்டே இருந்த ஒரு விடயத்தைத்தான் இங்கு வெளிப்படுத்தியிருக்கிறார். இந்த நிலைமையை அநேகமானவர்கள் அவதானித்திருப்பார்கள். அதனை கவிதைக்குள் கொண்டுவந்து சொல்லியிருப்பதானது ஹைக்கூ கவிதைகளின் அமைப்பு விதிகளை தெளிவாக புரிந்த ஒரு கவிஞரால் மட்டுமே முடியுமானதாக இருக்கும்.

ஹைக்கூ கவிதைகளை படைப்பதற்கு என்று சில விதிமுறைகள் இருக்கின்றன. ஆனால் அந்த விதிமுறைகள் மிகவும் பொருத்தமாக அமைவது ஜப்பானிய மொழியில் அந்தக் கவிதைகள் எழுதப்படும்போது மட்டும்தான். ஏனைய மொழிகளில் அதனை எழுதும்போது அநேகமான சந்தர்ப்பங்களில் அதன் அசைகள் இயல்பாகவே மாறிவிடும். அது தவிர்க்கமுடியாததும் ஆகும்.




அப்படியே வலிந்து அமைக்க முன்படுகையில் கவிதை மூலமாக சொல்லவரும் கருத்தில் பிறழ்வுகள் ஏற்படுவதற்கும் வாய்புண்டு. ஆகவே அனைத்து ஹைக்கூ கவிதைகளிலும் அந்த விதிமுறைகளை முழுமையாக பின்பற்ற முடியாது என்பது எனது கருத்து. இந்தக் கருத்தை ஹைக்கூ வித்தகர் என அநேகரால் மதிப்புரவு செய்யப்படும் கவிஞர் அமுத பாரதி அவர்களும் ஓரிடத்தில் குறிப்பிட்டிருந்ததை நான் அவதானித்திருக்கிறேன். அதேபோலவே நந்தவனம் சந்திரசேகரன் அவர்களும் தனது ஹைக்கூ கவிதைகள் சிலவற்றில் இந்த விதிமுறைகளில் இருந்து சற்று விலகியே தனது கவிதைகள் சிலவற்றைப் படைத்திருக்கிறார் என்பது அவதானிக்க முடிகிறது. ஈழத்தின் முதலாவது ஹைக்கூ தொகுப்பை

வெளியிட்ட முரளி அவர்களுடைய கவிதைத்தொகுப்பின் சில கவிதைகளில் இந்த விதிமுறைகள் முழுமையாக பின்பற்றப்படாமல் கவிதைகள் படைக்கப்பட்டிருப்பதை காணமுடியும்.

சந்திரசேகரனின் இந்த கவிதைத் தொகுப்பில் இருவர் அணிந்துரை வழங்கி யிருக்கிறார்கள். இரண்டாவதாக அணிந்துரை வழங்கியிருக்கும் கவிஞர் தனலட்சுமி பாஸ்கரன் அவர்கள் இவரின் துளிப்பாக்கள் சமூக சிந்தனை யோடும், சில முரண்களை சுட்டிக்காட்டுவதாகவும், மென்மையான உணர்வின் மறுபக்கங்களை சுட்டிக் காட்டுவதாகவும் அமையப்பெற்றுள்ளதாக குறிப்பிடு கிறார். அந்தக்கருத்து மிகவும் தத்ரூபமான



கருத்தாகவே இவருடைய கவிதைகளைப் படிக்கும்போது நானும் உணர்ந்தேன். இவர் குறிப்பிட்ட கவிதையில் என்னையும் பாதித்த கவிதைகள் இருக்கின்றன. அதற்கு உதார ணமாக இந்தக் கவிதையைப் பார்க்கலாம்.

வரிசை வரிசையாய்
அடுக்கு மாடிகள்
கோணலாய் மனித மனம்

அன்பே கடவுளென மதங்கள் அனைத்தும் போதிக்கின்றன. அதற்கு பௌத்த மதமும் விதிவிலக்கல்ல. ஆனால் இதற்கு மாறாக தனது தாய் நாட்டில் தனது சமூகம் அனுபவித்த துயரங் களை மனதில் இருத்தி தன் இனம்சார் சமூக பற்றுமிக்க பார்வையோடு இப்படி ஒரு ஹைக்கூவை வடிக்கிறார்

அன்பே கடவுள்
தமிழனைப் பலிகொள்ளும்
பௌத்த தேசம்

அனைவருக்குமே தாய் என்றால் ஒரு பற்று நிறைவாகவே இருக்கும். அது கவிஞருக்கும் விதிவிலக்கல்ல. தாயார் தயாரித்து வழங்கும் உணவின் சுவைக்கு நிகர் வேறு எங்கும் கிடைக்காது என்பது அனுபவ உண்மை. அவ்வாறன தனது தாயின் அன்பை தனது கவிதையில் வெளிப்படுத்துகிறார். மிகவும் அவதானிக்க வேண்டிய விடயம் என்னவென்றால் அதனை வெளிப்படுத்துவதற்கு தமிழரின் பாரம்பரிய உணவில் முக்கியத்துவம் பெற்ற ஒரு உணவையே அடையாளம் கண்டு கவிதைக்குள் வெளிப்படுத்துகிறார். பாருங்கள் அதன் அரு- மையை.

கூழ் குடிக்கிறேன்
திகட்டுகிறது இன்னும்
அம்மாவின் ஞாபகம்

ஒவ்வொரு கவிதைகளும் சில நிமிடங்கள் நின்று அதனை ஆழமாக உள்வாங்கி உணர்வு பூர்வமாக அனுபவித்து அடுத்த கவிதைக்குள் ஆர்வத்துடனும் வெவ்வேறு வகையான எதிர்பார்ப்புகளுடனும் நகர வைக்கின்றன.

இன்றைய ஊடகங்களின் உணர்வு பூர்வமற்ற செய்தி அறிவிப்பு பற்றி மனதுக்குள் கிளர்ச்சியை தோற்றுவித்த சம்பவங்களை அடிப்படையாக வைத்து அவரது இன்னொரு கவிதை இருக்கிறது.

திட்டமிட்ட கொலை
பதற்றமே இல்லாமல்
கடந்து போகும் செய்திகள்

இந்த கவிதைக்குள் அவர் பதுக்கி வைத்திருக்கும் கருத்துகள் பல. ஒரு தடவை வாசித்து அதனை விளங்கிக்கொள்ள முடியாது. இரண்டு மூன்று தடவைகள் நின்று நிதா னித்து இந்தக் கவிதையை படித்தால் மட் டுமே இவர் எவ்வளவு ஆழமான ஒரு கருத்தை மூன்று வரிகளுக்குள் ஒளித்து வைத்திருக்கிறார் என்பதை புரிந்துகொள்ளமுடியும்.

அடுத்து வருகின்ற கவிதையிலே சுற்றுச்சூழல் பற்றிய தற்கால நிலைமையையும் மாடி மனைகளை அமைத்து விற்பனையில் ஈடுபடும் மிகப்பெரிய வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடுபவர்களையும், அவர்களால் சூழலுக்கு ஏற்படும் பாரிய தாக்கத்தையும் மிகவும் நாசூக்காக வெளிக்கொணர்கிறார் புத்தனுக்காக



காத்திருக்கும் போதிமரங்களின் படைப்பாளி. மனதை ஒரு நிலைப்படுத்திக்கொண்டு இந்த கவிதையில் சொல்லப்படும் சூழலுக்குள் சென்று அதனை அனுபவித்துப்பாருங்கள் இந்தக் கவிதையின் அர்த்தமும் அதன் ஆழமும் புரியும்.




வீதிக்கு வந்தனர்
அடுக்குமாடிக் குழந்தைகள்
கோடை விடுமுறை

இதே கருத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் அமைந்த மற்றொரு கவிதை

ஏரியைத் தேடி அலைகின்றன
கடந்த வருடம் வந்துபோன
அயல் நாட்டுப் பறவைகள்

இந்த கவித்தொகுப்பை படிக்கின்றபோது தொடர்ந்து அதைப்பற்றி எழுதுவதை நிறுத்துவதற்கு மனம் இடம் தரவில்லை. ஒவ்வொரு கவிதையையும் தனித்தனியாக எடுத்து அவற்றைப் பற்றி நிறைவாக எழுதவேண்டும் என்றுதான் மனம் சொல்கிறது. ஆனால் கட்டுரையின் பக்கங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதும், அதற்கப்பால் எழுத முடியாது என்ற நிலைமையும் என்னை கட்டுப் படுத்துகிறது.

பிச்சைப் பாத்திரங்கள்
வாசலில் வரிசையாய்
நிரம்பும் உண்டியல்கள்

பாலாபிசேகத்தில்
கடவுள் சிரிக்கிறார்
பசியால் அழும் குழந்தை

அந்த இரண்டு கவிதைகளும் தற்காலத்தில் மனிதரின் மனதை படம் பிடித்துக்காட்டும் கவிகளாக நான் பார்க்கிறேன். இதுதான் நாம் காணும் இன்றைய உலகில் உண்மையான நிலைமையாக இருக்கிறது. அடுத்து காதலின் ஊடலையும் நினைவுகளையும் சில கவிதைகளில் இப்படி வெளிப்படுத்துகிறார் கவிஞர்.

மூடிய கதவுகளுக்குள்ளும்
நுளைந்து விடுகிறது
உன்னைப் பற்றிய நினைவுகள்

தியானிப்பதற்காக
கண்களை மூடினேன்
விழித்துக் கொள்கிறாய் நீ

வெட்கப்பட்டுத் திரும்புகின்றன
கடல் அலைகள்
கரையில் நீ கால் நனைப்பதால்

இப்படி மொத்தமாக 104 கவிதைகளை இந்த ஹைக்கூ தொகுப்பில் தொகுத்து வெளியிட்டிருக்கிறார் கவிஞரும் எழுத்தாளரும் இனிய நந்தவனம் சஞ்சிகையின் ஆசிரியருமான நந்தவனம் சந்திரசேகரன் அவர்கள். கவித்துவமிக்க ஒவ்வொரு வரிகளும் மெய்சிலிர்க்க வைக்கின்றன. சில கவிதைகள் நான் ஏற்கனவே குறிப்பிட்டுபோல் ஹைக்கூ விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டு எழுதப்பட்டிருந்தாலும் அவை மூன்றே வரிகளுக்குள் மிக ஆழமான கருத்துகளை தருவதாகவே அமைகின்றன். அநேகமான கவிகள் ஹைக்கூ வரையறையை வெளிச்சம் போட்டுக் காட்டத் தவறவுமில்லை. கவிநடை, கவிதைக்குள் உள்வாங்கப்பட்டுள்ள சொற்பிரயோகங்கள், வரிகளை அமைத்திருக்கும் ஹைக்கூ பாங்கு, சில



கருத்துக்களை பயமின்றி துணிச்சலுடன் வெளிக் கொணரும் தன்மை என அனைத்தும் மிக நிதானமாக கையாளப்பட்டு இந்த தொகுப்பு வெளியிடப் பட்டிருக்கிறது. கவிஞருக்கு வாழ்த்தையும் பாராட்டையும் தெரிவிப்பதோடு மேலும் பல படைப்புகளை எதிர்காலத்தில் வெளியிட நிறைவான ஆசிகள் கிடைக்க யாசித்து முடிக்கிறேன்.

# சிறுகதை

**- தமிழ்ப்பாணன் -**

தயாபரன் அலுவலகத்துக்குள் சுற்றி சுற்றி அங்கும் இங்குமாக நடந்துகொண்டே இருந்தான். அவனுடைய மனம் ஒரு நிலையில் இல்லாது பதைபதைத்துக்கொண்டே இருந்தது. என்ன செய்வதென்று அறியாமல் ஆழ்ந்த யோசனை அவனை ஆட்கொண்டிருந்தது. அவனால் அவனது அன்றைய அலுவலகக் கடமைகளைக்கூட பார்க்க முடியவில்லை.

அத்தனைக்கும் காரணம் வீட்டிலிருந்து காலையில் புறப்படும்போது நடந்த சம்பவங்கள்தான்.

நீங்க ஆம்பிளைகள் எப்பிடியாவது சமாளிப்பீங்கள் பொம்பிளைகள் நாங்கள் எப்பிடி... என்று தொடங்கினாள் சுபா. எவ்வளவு தேவைகள் இருக்கு... இண்டைக்கு 10ஆம் திகதி இன்னும் மூன்றே நாள்தான் இருக்குது வருசத்துக்கு. அவனவன் மாதத்தொடக்கத்திலயே குடும்பத்தோட போய் தேவையானது எல்லாத்தையும் வாங்கிக்கொண்டு போறான்கள். நாங்கள் மட்டும்தான் இன்னும்.. தேடி தேடி கட்டி வச்சாங்கள் நல்ல பெடியனாம் எண்டு. ம் இதுக்குகெல்லாம் கலியாணம் ஒரு கேடு.. மனுசி பிள்ளைகளை ஒழுங்கா பாக்க வக்கில்ல... இத்தனையும் இன்னும் பலவும் மனைவி சுபாவின் வாயிலிருந்து வந்த வார்த்தைகள்.



## அவனுக்கென்றோர் மனம்

அப்பா எங்கட பிறன்ட்ஸ்மார் எல்லாரும் வருசத்துக்கு தேவையானதெல்லாம் வாங்கிட்டாங்கள்... என்ன செய்வீங்களோ ஏது செய்வீங்களோ... இன்டைக்கு எனக்கு தேவையானதெல்லாம் வாங்கியே ஆகோணும்.. என்று ஒரு பெரிய பட்டியல் போட்டான் மகன் தர்சன்.

நானும் போயும் போயும் இந்தக் குடும்பத்தில வந்து பிறந்தன்... பொம்பிளை பிள்ளையெண்டால் எவ்வளவு தேவைகள் இருக்கும்... பாசம் காட்டினால் மட்டும் போதுமே... அங்கால பக்கத்து வீட்டில எல்லாம் வாங்கினதெல்லாத்தையும் பட்டியல் போட்டு கலர்ஸ் காட்டுதுகள்.. இன்டைக்கு பின்னேரம் மட்டும்தான் ரைம்... என்று மகள் சுமி தன்னுடைய பங்கிற்கு கொட்டித்தீர்த்ததோடு பட்டியலையும் வெளியிட்டாள்.

அலுவலகத்திலும் முயன்று பார்த்தான் கிடைக்கக்கூடிய புதுவருட போனஸ் ஐயாயிரம் அவ்வளவுதான் அதற்க்குமேல் எதுகும் கிடைக்கப்போறதில்லை என்பது திண்ணம். நேரம் கடந்தது. வீடு திரும்பவேண்டும். நண்பன் ஒருவனிடம் தொலைபேசியில் தொடர்புகொண்டான். அவனிடம் சென்றான் அவன் ஒரு இரண்டாயிரம் உரூபாய் மட்டும் கொடுத்தான்.

இப்போதைக்கு இது மட்டும்தான் என்னால முடியும்டா... தெரியும்தானே என்னோட நிலைமையும் கஸ்டம்தான்... போதாததுக்கு எல்லாரும் ஊருக்கு வேற போகணும்டா.. ஏதோ என்னால முடிஞ்சது.. சமாளிச்சுக்கோ...

மனக்கலக்கத்தோடு வீடு திரும்பினான்..

வீட்டில் காத்திருந்தவர்களுக்கு பெரிய சந்தோசம்... எங்கட கஸ்டத்தை கடவுள் பாத்திருக்கிறார் அதுதான்... இப்பிடி ஒரு வாய்ப்பை தந்திருக்கிறார்... மனைவி மலர்ந்த முகத்தோடு... இப்போ நேரம் நல்லா போயிட்டுது... நாளைக்கு காலம வேளைக்கே போய் தேவையானதெல்லாத்தையும் வாங்கலாம்....

காலையில் போட்டதைவிட பெரிய பட்டியலையும் எங்கெங்கு போகவேண்டும் என்பதையும் முழுமையாக விபரித்து முடித்தாள். அவளைத் தொடர்ந்து மகனுடைய பட்டியல், புதிய பல பொருட்களோடு நீண்டிருந்தது, அப்படியே அடுத்தது மகள் பட்டியலையும் போட்டு புதுவருட கொண்டாட்டம் எங்கெல்லாம் சென்று கொண்டாட வேண்டும் என்ற விபரங்களுடன் மிகக் கலகலப்பாக இருந்தாள்.

என்னங்க… வாங்க நேரத்துக்கு சாப்பிடுங்க… முகம் எல்லாம் நல்லா களைச்சுப்போய் வாடிப்போயிட்டுது… போய் கைகால கழுவிக்கொண்டு வாங்க…

ஆகா… கலையில வேலைக்கு புறப்படும்போது இந்தக் கரிசனையை காணமே… இப்போ திடீரென.. எப்பிடி… ஏன் இப்பிடி இருக்கிறாங்க… அப்போ எல்லாமே பணம்தானா.. பணம் இல்லைனா நல்ல அமைதியான மகிழ்ச்சியான வாழ்க்கையே இல்லையா…

இத்தனையும் அவன் வரும்போது கொண்டு வந்த பார்சலை பிரித்து பார்த்தபின் நடக்கும் சம்பவங்கள்.

தயாபரனின் மனசு இருந்ததைவிட இன்னும் வேதனைப்பட்டது… அவன் சென்று குளித்துவிட்டு வந்து மனைவி அன்பாக உணவு பரிமாற அதை சாப்பிட்டான்.

சாப்பிட்ட பின் அவன் இன்னும் கடுமையாக யோசிக்கத் தொடங்கினான்.

பிள்ளைகள் வேளைக்கு வந்து படுங்கோ நாளைக்கு காலையில வேளைக்கு எழும்பி வெளிக்கிட வேணுமெல்லோ… என்று அறைகூவல் விடுத்தாள் சுபா.

அவர்கள் எல்லோரும் சென்று படுக்கத் தயாராக,

சரி நீங்கள் படுங்கோ நான் கிட்டத்தான் போயிட்டு கெதியா வந்திடுவன்… என்று கூறி புறப்பட்டான்.

ஏறத்தாள ஒரு மணி நேரம் சென்றிருக்கும் அவன் வீட்டுக்கு திரும்பும்போது. அனைவரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்ததால் தன்னிடம் இருந்த திறப்பால் கதவைத்திறந்து அமைதியாக உள்ளே சென்று உடை மாற்றி அவனும் தூங்கினான்.

மறுநாள் காலை எல்லோரும் வேளைக்கே எழும்பிவிட்டார்கள். எல்லா கடமைகளையும் முடித்து தேனீர் அருந்த தயாரான சுபாவின் மனம் இருப்புக்கொள்ளாமல் இருக்கவே அவனுடைய அலுவலக கைபையை திறந்து பார்த்தாள்.

என்னங்க… என்னங்க… எங்க அதை காணமே… வேற எங்கயாவது எடுத்து வச்சிட்டீங்களோ பாதுகாப்பா இருக்க வேணுமென்டு… அதுகும் சரிதான் கொஞ்ச தொகையா… சும்மா அந்த ஆபிஸ் பாக்கில போட்டு வைக்கிறதுக்கு….. வேறு சில இடங்களிலும் தேடினாள் சுபா வைக்கக்கூடிய இடங்களில் எங்கும் காணவில்லை.

என்னங்க என்னாச்சு… எங்க வைச்சீங்க… சுபா தொடர்ந்தாள்

அதுவா… அது சேர்க்க வேண்டிய இடத்தில சேர்த்தாச்சு…. தயாபரன் பதிலிறுத்தான்.

ஐயய்யோ… இந்த மனுசன் செய்த வேலைய நினைச்சால்… இனியும் சரிப்பட்டு வராது… உன்னால தேடத்தான் முடியேல்ல… கிடைச்சதையுமா தவறவிடுவாய்… வாய்ப்பு ஒருதடவைதான் வரும்… கடவுளா பார்த்து குடுத்ததையும் தனக்கும் இல்லாம எங்களுக்குமில்லாம என்ன மனுசனப்பா நீங்கள்… முதல் நளைவிட ஆக்ரோசமாக பெரிய களேபரமே நடந்து கொண்டிருந்தது. பிள்ளைகள் இருவரும் மனக்கோட்டையெல்லாம் தவிடுபொடியாகிய அதிர்ச்சியில் இருந்தார்கள்.

ஐந்து மணி நேரத்திற்கும் மேலாக களேபரம் தொடர்ந்தது. அவ்வப்போது உள்ளே சில பொருட்கள் விழும் சத்தமும் கேட்காமல் இல்லை. மூவரும் இரவு போட்ட பட்டியல்களையும் திரும்ப நினைவுபடுத்தி அதெல்லம் இல்லாமல் போன ஆதங்கத்தை வெளிப்படுத்திக்கொண்டே இருந்தார்கள்.

கதவு தட்டும் சத்தம் கேட்டது. சுபா சத்தம் போடவேண்டாம்… யாரோ வந்திருக்கிறீனம்… கொஞ்சம் அமைதியாக இரும்.

யாரு வரப்போகினம் கடன்காரர்தான் வருவீனம் உம்மட்ட வாறதுக்கு வேற யார் இருக்கினம்… என்று அவள் ஓய்த பாடில்லை…

எல்லாவற்றையும் அமைதியாகவே கேட்டுக்கொண்டிருந்த தயாபரன் தற்போது கொஞ்சம் கோபப்பட்டவனாக சத்தம் போடவேண்டாம் சுபா…. என்று சற்று சத்தமாக அதட்டல் கலந்த தொனியில் சொன்னவாறே கதவை திறந்தான்.

அவன் கதவைத்திறக்க வெளியே இருந்தவர்களை பார்த்ததும் சுபா அமைதியானாள்.

நாங்கள் உங்கட முகப்பக்க பதிவை கேள்விப்பட்டு நாங்கள்தான் காலைல உங்களுக்கு கோல் பண்ணினம். நீங்க சொன்னது போல பொலிஸ் நிலையத்துக்கு போனம்…. எங்களுடைய பணம் கொஞ்சமும் குறையாமல் அப்படியே கிடச்சது…. நீங்க செய்தது எங்கட வாழ்கையையே திருப்பி கொடுத்ததுக்கு சமம். இல்லையென்டா குடும்பத்தோட தற்கொலைதான் செய்திருக்கணும். வேற யாரெண்டாலும் இப்படி செய்திருக்க மாட்டாங்க. இது எங்களிட்ட திரும்பி கிடைக்க வேணும் எண்டதாலதான் கடவுளாப்பார்த்து உங்கட கண்ணில காட்டியிருக்கிறார். பணத்தினுடை



சொந்தக்காரர் முகத்தில் சொல்ல முடியாத மகிழ்ச்சி தெரிந்தது. அவரோடு அவருடைய குடும்பத்தினரும் வந்திருந்தார்கள் எல்லோருடைய முகமும் தயாபரனை கடவுளைப்பார்பதுபோல் பார்த்துக்கொண்டிருந்தது.

என்னங்க நீங்க பெரிய வசனமெல்லாம் சொல்றீங்க... ஒரு உரூபாவாக இருந்தாலும் என்னுடையதல்லாதது எனக்கு சொந்தமாகாது.... அது எனக்கு தேவையுமில்லை.. அவசியமுமில்லை... நான் என்னுடைய மனம் என்ன சொன்னதோ அதைத்தான் செய்தேன்.... எனக்கு தெரியும் ஒருவர் தனது பணத்தை தொலைத்துவிட்டால் எவ்வளவு பிரச்சனைகளுக்கு முகம்கொடுப்பார் என்று. அந்த நிலைமை எவ்வாறான முடிவுகளை எல்லாம் உருவாக்கும் என்பதும் தெரியும். அதுதான் நான் அதை உரியவரிடம் சேர்க்கவேண்டும் என்று சேர்த்தேன்.... என்று இன்னும் நிறையவே சொல்லி முடித்தான் தயாபரன்.

உங்களுடை மனம் எல்லோருக்கும் வராதுங்க... நாங்க வந்து ரொம்ப நேரமாச்சு... உங்கட குடும்ப நிலைமை என்ன என்டதையும் இந்த கொஞ்ச நேரத்தில முழுசா அறிஞ்சிட்டம்.... இந்த நிலைமையிலயும் உங்களுடை மனசு......... என்று இழுத்துக்கொண்டே... ரொம்ப நன்றி... ரொம்ப நன்றி... ரொம்ப நன்றி என்று பல நன்றிகளை சொல்லிக்குவித்தார் அவர்.

இனிமேல் உங்களுடைய உறவுகளோடு என்னுடைய குடும்பமும் ஒன்று என நினைத்துக்கொள்ளுங்கள்... என்னுடைய கம்பனியில் உங்களைப்போன்ற நேர்மையான ஒருவர்தான் முகாமையாளராக இருக்கவேண்டும். உங்களுடைய நியமனக் கடிதத்தை புதுவருடம் முடிந்த முதல் வாரத்தில் உங்களுக்கு பொருத்தமான ஒரு நாளில் எமது அலுவலகத்தில் வந்து பெற்றுக்கொள்ளுங்கள்.... இந்த புதுவருட கொண்டாட்டம் எல்லாம் நீங்க எங்களோடதான் கொண்டாடனும்... பிள்ளைகள்... உங்க மனைவி விரும்பினதெல்லாம் வாங்க இதில கிப்ட் வவுச்சர்கள் சிலதும் இருக்கு அவங்களுக்கு பிடிச்சத பிடிச்ச இடத்தில போய் வாங்கலாம்... பணமாக குடுத்தா உங்க மனசு வாங்க விடாது என்று தெரிஞ்சேதான் இந்த ஏற்பாடு...

தயாபரன் வேண்டாம் என்று எவ்வளவு சொல்லியும் கேட்காமல் வலிந்து கொண்டுவந்த அன்பளிப்பு பொருட்களையும் வவுச்சரோடு சேர்த்து கட்டாயப்படுத்திக் கொடுத்தார்கள்.

16ஆம் திகதி காலைல.. புறப்படத்தயாராகுங்க உங்க மனைவி கொஞ்ச நேரத்துக்கு முதல் போட்ட பட்டியலுக்குள்ள வரக்கூடிய சில இடங்கள் எங்களோடயே பார்த்திட்டு வரலாம் போய்வரலாம்....

இவ்வளவு நிகழ்வுகளையும் விடயம் அறிந்த சில ஊடகங்களும் தயாபரனுடைய வீட்டுக்கே வந்து செய்தியாக்கி தங்களுக்கு வருவாயாக்க, தயாபரன் ஒரே நாளில் பிரபலமானான். அந்தளவுக்கு அவன் நண்பனை சந்தித்துவிட்டு அவன் கொடுத்த இரண்டாயிரம் உரூபாய்களை பெற்றுக்கொண்டு திரும்பும்போது பஸ்ஸில் கண்டெடுத்த தொகை பல மில்லியன்கள் தேறும். அவன் எதையும் கணக்கெடுக்காது அவனுக்கென்றோர் மனதை வைத்திருந்தது இன்று இந்தளவுக்கு அவனை உயர்த்திவிட்டது.

**- தமிழ்ப்பாணன் -**



# பழைய பஞ்சாங்கம்

- அனுராதா சௌரிராஜன் -

பாட்டி கதை சொன்ன
பழைய காலம் நழுவ
பேத்தி பாடம் எடுக்கிறாள்
பாட்டி கதை கேட்கிறாள்!
பாட்டியம்மா - உங்கள்
பகுத்தறிவை வகுத்திடுங்கள்!
நீயோ நானோ யார் போட்டாலும்
நல்லாவே உடையும் எக்குடமும்!
வேப்பிலை அடிக்கும் பழைய
காப்பியங்கள் வேலைக்காகாது!
எந்த திசை என்பதை உன்
நைந்த விளக்கங்கள் நகர்த்தாது!
கணினி காலம் இது
கையிலே உலகம்!
நீ வாழ்ந்த காலம்
நேரம் தான் விரையம்!
வலித்தால் “அம்மா” என்பாயே
வாஞ்சையோடு கணினி வருடுமா?
வெப்சைட்டுகள் வேண்டியதிருக்கு
வாய்க்கு ருசியாய் கண்ட கண்ட
நோய் நோக்கிச் செல்லாத
தாய் கைப்பக்குவம் - தருமா?
இருப்பதைக் கொண்டு
சிறப்பாய் வாழ்ந்த காலமது!
இருப்பதையெல்லாம் வரித்து
இன்னல் தருவிக்கும் காலமிது!
பக்கத்தில் அமர்ந்திருந்து
பாசமாய் பேசிய காலமது!

பார்த்திருக்கும் கைபேசிகள்
சேர்த்திருக்குமா உறவுகளை?
ஆத்திர அவசரத்திற்கு
சாத்திரம் பார்த்திடாது
சட்டென உதவிய காலமது!
சரியெது,தவறெது என
சரியாகப் புரிந்திடாது
சுயநல சூழல்களான காலமிது!
சின்ன சின்னப் பிரச்சனைகளை
அன்னன்னிக்கே பேசி
அலசி தீர்த்த காலமது!
என்ன நேர்ந்தாலும்
பின்னே பார்த்துக்கலாமென
உண்ண உறங்க நேரமின்றி
தன்னை உணராத காலமிது!
தலைக்கு எண்ணெயிடாத்
தலைமுறை உனது!
தொட்டதற்கும் கூகுள் தேடி
தொலைத்திடும் சுயமனது!
பழையதைக் கட்டிக் கொண்டு
கழுதை மேய்க்கக் கூறவில்லை!
பொருத்தமானதை பற்றிக்கொண்டு
பொறுப்புடன் இரு என்கிறேன்!
எத்தனை சொன்னாலும்
பழைய பஞ்சாங்கம் என
பெயரிட்ட பேத்தியை-என்ன
பெயரிட்டு அழைப்பது?



## பகைவனுக்குமருள்வாய் நன்நெஞ்சே

பகைவனுக்குமருள்வாய் நன்னெஞ்சே
அன்பை
அள்ளி வழங்கிடு
பகைவனுக்கும் ..
எதிரி என்பதே
எதிர் மறையன்றோ?
உலகமே
உள்ளத்தின் பாசத்தால்
இயங்கிட..
உருக்குலைய
வேண்டுமோ
நெய்த
நினைவுகள்?
....
குற்றம்  செய்யாதவன்
மனிதனே அல்ல..
தீமை செய்யாமலிருப்பதே
நற்செயலின்
விதையன்றோ?
நிமிர்ந்து
வானம் பார்ப்பதே
இறைவனுக்காக! ....
ஆண்டவனை மனிதரில்...
பகைவரில்
தேடுவோம்..
வான் வழங்கும்
மேகநீர்
எல்லோருக்குமன்றோ?
இதயத்தின்
நேசமதை
எல்லோரையும்
நனைக்கட்டுமே....!!!!!

**- கவிமணி இரஜகை நிலவன் -**



## ஐக்கியமே பலம்

அகிலம் போற்றும்
அன்பை அளிப்போம்
ஆணவத்தை அழித்து
அரவணைப்போம் ஆனந்தமாய்
இசைபட இரக்கம்
கொண்டு வாழ்ந்திடுவோம்
ஈட்டியதைக் காட்டிலும்
ஈதலே மகிழ்விக்கும்
உள்ளத்தை ஊக்குவித்து
உயர்த்திடும் உறவே
ஊர்கூடித் தேரிழுப்பதைப்போல்
உறவுகள் கூடி
இருப்பதே பெருமை
இதையுணர்தல் அருமை
எண்ணங்கள் உயர்வாக
எய்திடல் வேண்டும்
ஏற்றம் தந்திடும்
மாற்றம் செய்திடும்
ஐக்கியமே பலமாக
ஐயமின்றி தெளிவுற
ஒற்றுமை வளர்த்திடு
ஒழுக்கம் போற்றிடு
ஓதலை தவறாது
ஓங்கிடச் செய்திடு

***- சரவணா தேவி -***



# மழை

**– சாந்தி குமார் –**

**சிறுகதை**

இயற்கை எழில் கொஞ்சும் பூஞ்சோலை என்னும் அழகான கிராமத்தில் பல குடும்பங்கள் வசித்து வந்தனர்..அவர்கள் அனைவருக்கும் விவசாயமே பிரதான தொழிலாக இருந்தது.. மாணிக்கம் என்ற விவசாயி இயற்கை முறையில் இயற்கை உரங்களை பயன்படுத்தி விவசாயம் செய்து வந்தார்.. தங்கள் தோட்டத்தில் விளைந்த காய்கறிகளை பக்கத்து ஊரில் சந்தை நடக்கும் போது மாணிக்கம் விற்று வந்துள்ளார்.

அவர் விற்கும் காய்கறிகளை வாங்குவதற்கு என்று மக்கள் கூட்டம் இருக்கத்தான் செய்வார்கள். ஏனென்றால் இயற்கையான முறையில் பூச்சிக்கொல்லி இல்லாத காய்கறிகளை விற்கும் போது யாருக்கு தான் வாங்குவதற்கு மனம் வராது.



மாணிக்கம் தன்னுடைய மகளை நன்றாக படிக்க வைத்து நல்ல இடத்தில் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் சந்தையில் விற்ற காய்கறிகளில் கிடைத்த லாபத்தை ஒரு பங்காக மகளுக்கு சேமித்து வைத்துள்ளார். இப்படி ஒரு சூழ்நிலையில் வானம் பொய்த்த பூமியாக காட்சியளித்தது.

அனைத்து விவசாயிகளும் மழை இல்லாமல் விவசாயம் செய்வதற்கு மிகவும் கஸ்டப்பட்டுக் கொண்டிருந்தனர். அப்படி ஒரு நிலையில் அந்த கிராமத்தில் இருந்த சில பேர் பக்கத்தில் உள்ள ஊருக்கு இடம்பெயர்ந்து சென்று விட்டனர்.

ஆனால் மாணிக்கமோ நம்பிக்கையுடன் என்றாவது ஒரு நாள் நிலை மாறும் என்ற நிலையில் உறுதியாக இருந்தார்.. மாணிக்கம் தன் மகளை அழைத்துக் கொண்டு கிராமத்தில் இருக்கக்கூடிய கோவிலுக்கு சென்று வந்தார்.

அப்போது ஒரு சாமியாடி உங்கள் ஊரில் மழை இல்லாமலும் விவசாயமும் சரி பட நடைபெறாமல் இருப்பதற்கு நீங்கள் மிகவும் வருத்தப்பட்டு கொண்டிருக்கிறீர்கள்.... அதற்கு காரணம் உங்களின் ஊரில் உள்ள கோவிலை நீங்கள் சரிவர கவனிக்காமல் இருப்பது தான்... எனக்கு பொங்கல் வைத்து திருவிழா நடத்தினால் கண்டிப்பாக மழை பெய்யும்.... என்று சாமியாடி கூறினார்.

அதனை ஊர் பெரியவரிடம் மாணிக்கம் கூறினார்.

மாணிக்கம் சொல்வதைக் கேட்டால் நம் ஊரில் கண்டிப்பாக மழை பெய்யும் என்று ஊர் பெரியவர்கள் முடிவு செய்து கோவிலில் பொங்கல் வைத்து திருவிழா நடத்த வேண்டும் என்று ஊர் பெரியவர்கள் ஊரில் உள்ள அனைவரும் முடிவு செய்தனர்.

ஒரு நல்ல நாள் குறித்து திருவிழா நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது அதன்படி ஊர் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து திரு விழாவில் பணிகளை மேற்கொண்டனர்.

அவர்கள் குறித்த நல்ல நாளும் தேதியும் வந்தது. கோவில் திருவிழா களை கட்டியது. அக்கம் பக்கத்து ஊரில் இருந்து அனைவரும் கிராமத்திற்கு வருகை புரிந்து சாமிக்கு திருவிழா நடத்தி மனதை குளிர செய்தனர்.

உறவுகள் அனைவரும் கோவிலில் பொங்கல் வைத்து மகிழ்ந்தனர். அன்னதானத்திற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஜாதி மத மேதமின்றி அனைத்து மக்களும் திருவிழாவை உற்சாகமாக நடத்தி முடித்தனர். ஊர் மக்கள் அனைவரும் ஒன்றாக அமர்ந்து கோவிலில் பேசிக் கொண்டிருந்த நேரத்தில் வானத்தில் திடீரென்று கரு மேகங்கள் சூழ இடி மின்னலுடன் பெரிய மழை பெய்தது. அனைவரும் மிகுந்த மகிழ்ச்சி கொண்டனர்.



திருவிழா சிறப்பாக நடத்தி முடித்தவுடன் ஊரில் மழை பெய்தது அனைவர் உள்ளத்திலும் உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியது. இது அனைத்திற்கும் காரணமான மாணிக்கத்திற்கு ஊர் மக்கள் அனைவரும் நன்றிகளை கூறிக் கொண்டனர்.

ஊர் பெரியவர்கள் மாணிக்கம் நீ எதற்கும் கவலைப்படாதே உன்னுடைய மகளின் திருமணத்தை இந்த ஊரே மெய்ச்சும் படி நடத்தி முடிக்கும் என்று ஊர் மக்கள் அனைவரும் பெரியவர்களும் மாணிக்கத்திடம் கூறினர்.

இதன் மூலம் ஊர் பெரியவர்கள் இனி வருடம் வருடம் கோவில் திருவிழா நடைபெறும் தினமும் பூஜை நடைபெறும் என்று உறுதிப்பட கூறினர்.

மாணிக்கம் ஊர் பெரியவர்கள் அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துவிட்டு மழை விட்டவுடன் அனைவரும் அவரவர் வீட்டிற்கு சென்றுவிட்டனர்.

மாணிக்கத்திற்கு விவசாயத்தில் நல்ல முன்னேற்றம் கண்டு ஊர் பெரியவர்களின் மத்தியில் அனைவரின் ஒத்துழைப்பாலும் தன்னுடைய ஒரே மகளின் திருமணத்தை நன்றாக நடத்தி முடித்தார். மாணிக்கத்திற்கு மகளை புகுந்த வீட்டிற்கு அனுப்பும் போது உற்சாக மிகுதியாய் கண்களில் ஆனந்தக் கண்ணீர் தழும்பி நின்றது.

ஊர் பெரியவர்கள் மாணிக்கம் எதற்கும் கவலைப்படாதே நாங்கள் அனைவரும் உன்னுடன் தான் இருக்கிறோம் என்று கூறினார்கள்.. அவனுடைய ஒரே மகள் திருமணம் முடிந்து ஊர் பெரியவர்கள் அனைவரிடமும் ஆசீர்வாதம் வாங்கி மகிழ்ச்சி அடைந்தாள்.

புகுந்த வீட்டிற்கு தன்னுடைய புதுவாழ்க்கையை வாழ்வதற்காக அனைவரிடமும் ஆசிபெற்றுச்சென்றாள்.

போகும்போது… அப்பா எதற்கும் நீங்கள் அழக்கூடாது கவலைப்படக்கூடாது நான் உங்களை அடிக்கடி பார்க்க வருவேன் என்று கூறி சென்றாள்.


உங்கள் படைப்புகளுக்கான விமர்சனம் எமது சஞ்சிகையில்

வெளிவரவேண்டும் என விரும்புவோர் நீங்கள் வெளியிட்ட படைப்பின் இரண்டு பிரதிகளை எமக்கு அனுப்பி வையுங்கள். முன்னுரிமை அடிப்படையில் நூல்களுக்கான விமர்சனங்கள் வெளியிடப்படும். நூல்களை அனுப்ப iravi.magazine@gmail.com என்ற எமது

மின் அஞ்சல் முகவரியில் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

நன்றி



மடலேறுதல் அல்லது மடலூர்தல் என்பது சங்ககாலத் தமிழர்களின் வாழ்வியல் முறைகளில் இடம்பெற்ற ஒரு செயல். ஒரு பெண்ணை ஒருதலையாய் விரும்புகின்றவன் அல்லது அந்தப் பெண்ணின் காதலன் பெற்றோரால், உறவினர்களால் ஏற்கப் படாதபோது பனங்கருக்கு மட்டையால் குதிரை, யானை போன்று வடிவமைத்து அதற்கு பல்வகை மணிகள் எருக்கம் பூக்கள் அணிவித்து, தான் எலும்பு மாலை அணிந்து கொண்டு

**கவித்திலகம் வெற்றிப்பேரொளி,**

**திருக்குவளை, தமிழ் நாடு**

அந்த உருவத்தின் மீது உட்கார்ந்து கொள்வான். கையில் அவன் விரும்பும் பெண்ணின் படத்தை வரைந்து பிடித்திருப்பான்! அந்த உருவத்தை தலைவி இருக்கும் வீதி வழியாக சிறுவர்கள் இழுத்துச் செல்வார்கள். இந்தச் செயலுக்குத் தான் “மடலேறுதல்” என்று பெயர்!

இதனால் இருவரும் காதலர்கள் அல்லது அவனின் காதலுக்கு உரியவள் அவள் என்பது ஊரறிந்து விடும். ஆகையால் அப்பெண்ணை பெரும்பாலும் அவனுக்கே மணமுடித்து வைத்துவிடுவார்கள். மடலேறுபவன் நிர்வாணமாக வருவான் என்றும் சிலர் குறித்துள்ளனர்.

இது பற்றி சங்க இலக்கியங்களில் 16 பாடல்கள் உள்ளன எனக் கணக்கிட்டுள்ளனர்! முனைவர் வ. சுப. மாணிக்கம் எழுதிய நூல் “தமிழ்க்காதல்!” அதில் நற்றிணை 143, 152, 342, 377, குறுந்தொகை 14, 17, 32, 173, 182 (இவை ஐந்திணைக்கு உரியவை.), கலித்தொகை 138, 139, 140, 141 (இவை பெருந்திணைக்கு உரியவை.) என 13 பாடல்களைக் குறித்துள்ளார். அதேசமயம் முனைவர் மா. சிவகுமார் என்பவர் “சங்க இலக்கியத்தில் மடலேற்றமும் வனாமுறைப் பதிவுகளும்” என்ற தன் ஆய்வுக்கட்டுரையில்



# மடலேறுதல்

## ஒரு பார்வை

முனைவர் வ. சுப. மாணிக்கம் கூறியுள்ளதில் நற்றிணை 143ஆம் பாடல் என்பது தவறு என்றும், 146-ஆம் பாடலே ‘மடலேறுதல்’ பற்றியது என்றும் தெரிவித்துள்ளார். மேலும் கலித்தொகை 58, 61, நற்றிணை 220ஆம் பாடல்களும் மடல்மா பற்றி பேசுவதால் மொத்தம் 16 பாடல்கள் எனத் தெரிவித்துள்ளார்.

தொல்காப்பியர் இதைப் பொருந்தாக் காதலான பெருந்திணைக்குள் கொண்டு வருகிறார். மடலூர்தல் குறித்து திருக்குறளில் இன்பத்துப்பாலில் 34 ஆம் அதிகாரமாகிய “நாணுத் துறவுரைத்த”லில் ஆறு குறட்பாக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது! எவ்வளவு தான் காமத்தில்.... காதலில்... விழுந்திருந்தாலும் பெண் மடலேற மாட்டாள். ஆண் தான் மடலேறுவான்! “கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப் பெண்ணின் பெருந்தக்க தில்” என்ற 1137ஆம் குறள் தெளிவாக இதனைச் சுட்டுகிறது. (கடல் போல் காம அலையெ-ழுந்து வருத்தினாலும், மடல் ஏறாத பெண்ணின் மனநிலையை விட பெரியதொன்று உலகில் வேறில்லை!)

***இப்போது இந்தப் பழக்கம் தமிழ்க் சமூகத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் சில பழக்க வழக்கங்கள் காலப் போக்கில் வேற்றுரு கொண்டு தொடரும். அப்படி மௌனராகம் படத்தில் நூலகத்து ஒலிபெருக்கியில் தன் காதலைச் சொல்லுவாரே கார்த்திக், அந்தக் காட்சியை, மடலேறுதலின் மாற்று வடிவமாக இயக்குநர் மணிரத்தினம் சித்தரித்திருப்பாரோ..... என எண்ணத் தோன்றுகிறது. இப்போதெல்லாம் செல்போன் கோபுரங்கள் மீது ஏறிக் கொண்டு மிரட்டுவது போல, தன் காதலை வெளிப்படுத்துவதுகூட சங்ககால மடலேற்றத்தின் நவீன வடிவம் எனக் கொள்ளலாம்.

# அமைதி திரும்பட்டும்



புனித ரமலான் கொண்டாட்டம் வரை எல்லாம்
நலமாகவே போனது
அதற்குப்பிறகுதான் .... ....!!!!
.சுற்றுலா சென்றவர்கள் கனவிலிலும்
நினைத்துப்
பார்க்கவில்லை
எமனுலகு காண்போம் என்பதை
ஒன்றல்ல இரண்டல்ல ஒரேநாளில்
26 பேர்
அப்படி என்னதான்  சாதித்து விட்டது தீவிரவாதம்   .
அப்பாவி மக்களின் உயிர்களை
அநியாயமாக
பலியிடல் தான் தீவிரவாதமா ...??
எதையோ சாதித்து விட்ட இறுமாப்பில் பயங்கரவாதிகள்
கொக்கரிக்க...
போர்  ஒத்திகை
எனும் பெயரில்
இரவோடு இரவாக
ஞஆபரேசன்
செந்தூர் எனஞ
இந்தியா சரியான
பதிலடி கொடுத்திட பதற்றம் தொற்றிக் கொண்டது
உலக நாடுகளும் உன்னிப்பாக கவனிக்க
பாக்கிஸ்தானும் செய்வதறியாது பதறிதவிக்க
எல்லையெங்கிலும் குண்டுமழை
விளைவுகள் விபரீதம் ஆகலாம் என உணர்ந்த
அமெரிக்காவும
ஐ நாவும்
சமாதானம் பேசிட
சமரசம் செய்திட
இது தற்காலிக போர் நிறுத்தமாகியது
எப்போதும் மீண்டும் தொடரலாம்
ஆனால் ஆனால் அதற்குமுன்
இதனால் நீங்கள் என்ன சாதித்துவிடப் போகிறீர்கள் ????
எதிரிகளே
ஒருமுறை யோசியுங்கள்
மனிதமும் மௌனமும் அமைதியும் போதிப்போம்
வெண்புறாக்களை தூதனுப்புவோம்
வேண்டாம் இனி ஒருயுத்தம்
வேண்டும் எங்கும் சிரிப்பு சத்தம்

நு. இரவிச்சந்திரன்
பழனி



# கறிவேப்பிலை

~ இரமணி ~

"டேய்.... சுரேஸ்.... இங்கே வா...." முதலாளி அழைத்தார்....

"ஐயா...." ஓடிப்போய் நின்றான் சுரேஸ், அவனுக்கென்ன, 18 வயது தாண்டாத பருவம், நல்ல திட காத்திருப்பான் தேகம். மார்க்கெட்டில் மூட்டை தூக்கித் தூக்கி உரமேறிய உடம்பு.

"டேய்.... ரெண்டு பேரக் கூட்டிக் கோ.... நாலு மூட்டை காபேஜைக்கொண்டு போய் மூலக்கடை செட்டியார் கடைல எறக்கிடு. கூலி தருவார். வாங்கிக்க.... போ ...சீக்கிரம்..."

"சரீங்கய்யா". சுரேஸ் கிளம்பினான்.





சுரேஸ் இல்லையானால் முதலாளிக்கு கையும் ஓடாது காலும் ஓடாது. மார்க்கெட்டில் அவனுக்கு எல்லாம் அத்துப்படி. விடியற்காலம் 4 மணிக்கு கோயம்பேட்டிலிருந்து காய் கனிகள் லாரியில் வரும்... தவிர தக்காளி ரெண்டு மூணு லாரி வரும். எல்லாம் 9 மணிக்குள்ள இறக்கி, ரோட்டைக் கிளீயர் பண்ணிடணும். சுரேஸோட ஏழெட்டுப் பேர் வேலைசெய்யறா. ஒன்னு ரெண்டு வயதானவர்களும் இருப்பார்கள். அவர்களுக்கென சற்றுக் கடினமில்லாத வேலைகள் கொடுக்கப் படும்.

இவர்களுக்கு தலைவன் ரவி, ரௌடி..... முதலாளிக்கு அவனை அறவே பிடிக்காது. இருந்தாலும் யூனியனுக்கு பயந்து அவனை வேலையில் வைத்துக் கொண்டிருக்கிறார். அவன் மற்றவர்களை வேலை வாங்கிவிட்டு, சம்பளத்தை ஒழுங்கா வாங்கிட்டுப் போயிடுவான். வேலையில்லாத நேரத்தில் போதையிலேயே இருப்பான்.

சுரேஸ் செட்டியார் கடையில் சரக்கை இறக்கிவிட்டு, வீட்டிற்குப் போனான்.... அவனது அம்மா.... விடியற்காலையில் நான்கு ஃப்ளாட்களுக்குச் சென்று முறைவாசல் வேலைகளை முடித்துவிட்டு. பத்து மணிவரை அவனுக்காக காத்திருப்பா.... அதன்பின் நான்கைந்து வீடுகளில் பத்துப்பாத்திரம் தேய்த்து, வீடுகளைப் பெருக்கி, துடைத்து சுத்தப்படுத்திவிட்டு மதியம் 12 மணிக்கு வீட்டுக்கு வந்து உலை வைப்பா. அவளுக்கு மட்டும்தான் சாப்பாடு சுரேஸ் தினமும் வெளியேதான் சாப்பாடு. காலையில் அவனுக்கு கஞ்சி தயாராக இருக்கும். சீக்கிரமாக வந்தால் அம்மா கையால் வாங்கிக் குடிப்பான்.

அம்மா, 45 வயது... முறை வாசல், வீட்டு வேலைகள் மூலம் ஓரளவு வருமானம் வருகிறது. தவிர சுரேஸ் வாராவாரம் தரும் கூலி வேறு. வீடு குடிசை தான். அவளது கணவன் சுரேஸ் கைக்குழந்தையாக இருக்கும் போதே இவளைத் தவிக்க விட்டு, எங்கோ ஓடிவிட்டான். குடிகாரனாக மனைவியின் காசில் அனுபவித்து.... குடித்துவிட்டு வந்து மனைவியை அடித்து துன்புறுத்தியவன் விட்டுச் சென்றதில் அவளுக்கொன்றும் நஷ்டமில்லை. உடலில் தெம்பிருக்கு உழைத்தாள்.

சுரேஸைப் படிக்க வைத்தாள்... எட்டாவதற்கு மேல் படிப்பு ஏற வில்லை. ஆனால் பள்ளி விளையாட்டுப் போட்டிகளில் திறமைசாலியாக இருந்தான். ஊர் கபடி டீமில் விளையாடினான்.

அவன் அம்மா வேலை செய்யும் வீடுகளில் மார்க்கெட் முதலாளியின் வீடும் ஒன்று. ஒருநாள் சுரேஸைப்பற்றி

முதலாளியின் காதில் போட்டாள். "அதற்கென்ன.....என்னை வந்து பார்க்கச் சொல்" என்றார். போய்ப் பார்த்தான். வேலை கிடைத்தது. பலநாட்கள் இரவு மார்க்கெட்டிலேயே தங்கிவிடுவான். பெரும்பாலும் இரவுகளில் தான் லோடு வரும்.

ரவி வந்தான் "ஏலே... சுரேஸ்... எலக்ஷன் வந்தாச்சுலே..... எல்லாவனும் குவார்ட்டரும், பிரியாணியும் தருவான்,".

"போங்கண்ணே.... நமக்கெதுக்கு... உழைக்காத காசு ஒட்டாது"

"இப்படியே சொல்லிட்டிரு.... அவனவன் எங்க கெடைக்கும்.... எப்பிடி கெடைக்கும்னு அலையறான். உரிச்ச வாழைப்பழம்... வாயில விழுது... வேண்டாங்கறே...."

"இல்லேண்ணே... நமக்கு ஆண்டவன் படியளக்கறான்... அது போதும்"

"நமக்குன்னு சொல்லாதே உனக்குன்னு சொல்லு.... ஓகே.... நான் தலைவரைப் பாத்து எப்போ... எப்பிடின்னு கேட்டுட்டு வரேன்"

இவர்கள் பேசிக் கொண்டிருப்பதை தூர இருந்து பார்த்துக்கொண்டிருந்த முதலாளி, சுரேஸை அழைத்தார். "டேய்... சுரேஸ்.... ரவி என்னடா சொல்றான்..."



"ஒன்னுமில்லீங்க முதலாளி.... இது வேற..."

"இல்லேடா..... அவன்கிட்ட கொஞ்சம் ஜாக்கிரதையா இரு... தூரம் விட்டே பழகு"

"சரிங்க முதலாளி"

நாட்கள் கடந்தன. சுரேஸ் மிகவும் பிஸியாக இருந்த வேளையில் ரவி வந்தான் ...

"ஏலே... சுரேஸு..... நாங்கள்ளாம் இன்னிக்கு சாயங்காலம்.... ஒரு கூட்டத்துக்குப் போறோம்.... நீயும்... வர்றே.... ஒரு குவாட்டரும் பிரியாணியும் 300 ரூபாயும் கெடைக்கும்..... 5 மணிக்கு ரெடியா... இரு.... வண்டி வரும்..."

"வேண்டாண்ணே.... நீங்க போயிட்டு வாங்க..... ராத்திரி பத்து மணிக்கு லோடு வருது..... எறக்கணும்... மொதலாளி தேடுவாரு.... இல்லேன்னா.... வைவாரு"

"பத்து மணிக்குத்தானே, அதுக்குள்ளாற வந்துடலாம்.... தானா வர்ற லட்சுமியை வேணாங்காதே......5... மணி... ஓகே...? ...ஓகே"

பாவம் சுரேஸ் தூண்டிலில் சிக்கிவிட்டான். போகவில்லையென்றால், ரவி நாளைக்கு வேறெதையாவது காரணம் காட்டி. இவன் வேலைக்கே உலை வைத்து விடுவான். பத்து மணிக்கு வந்துடலாமே.... போனான் சுரேஸ். சுரேஸ் வாரத்தில் ஒருநாள், சனிக்கிழமை இரவில் கொஞ்சம் குடித்து விட்டுப் படுப்பான். ஏனெனில் சனி இரவுகளில் அதிகமாக லோடு வராது. ஞாயிறு விடுமுறை.

கூட்டம் உரிய நேரத்தில் தொடங்கவுமில்லை. இரவு பன்னிரண்டாகியும் முடியவில்லை.

இரவு ஒரு மணிக்கு சுரேஸ் மார்க்கெட் வந்தபோது முதலாளி பயங்கர கோபத்திலிருந்தார். "சொன்னா.... கேக்கமாட்டேல்லே..... பத்து மணிக்கு வந்த லோடு, இன்னும் எறங்கலே.... அவன் வண்டியை எடுக்க வேண்டாம்? வூட்டுக்கு போகவேண்டாம்? பொறுப்பற்ற பசங்க.... உங்களைக் கடிக்கிட்டு மாரடிக்க வேண்டியிருக்கு...."

"இல்லே...மொதலாளி.... இதோ பத்து நிமிசத்துல முடிச்சுடலாம்.... ஏலே... எல்லாரும் வாங்கலே.. " என்றான் சுரேஸ்.

மளமளவென்று லாரி காலியாகியது. லோடு எறக்கி முடிச்சதும் சுரேஸைத் தனியாகக் கூப்பிட்டுக் கண்டித்தார் முதலாளி.” சரீங்க... இனி ஜாக்கிரதையாயிருக்கேன்.... பத்து மணிக்கு வந்துடலாமேன்னுதான் போனேன் ஐயா.... இப்பிடியாகும்னு தெரியாது....மன்னிச்சுக்குங்க” என்றான் சுரேஸ்.

இதைத் தொடர்ந்து இன்னொரு நாள், அன்று சனிக்கிழமை.....இதேபோல் ரவி, சுரேஸைக் கூட்டிக் கொண்டு போனான். அம்மாவிடமும் சொல்லிக் கொள்ளவில்லை. சாதாரணமாக சனிக்கிழமைகளில் சுரேஸ் இரவில் குவார்ட்டர் மற்றும் பிரியாணிப் பொட்டலங்களுடன் வீட்டிற்கு வந்து அம்மாவுடன் தான் சாப்பிட்டுவிட்டு, படுப்பான். அன்று வெகுநேரம் காத்திருந்த அம்மா.... சரி.... ஏதோ வேலை போலிருக்கு என்று தண்ணீரைக் குடித்து விட்டுப் படுத்தாள்.

இரவு சுமார் ஒரு மணிக்கு வீட்டின் கதவு தட்டப்பட்டது. சுரேஸ் தான் வந்துவிட்டான் என அம்மா ஓடிவந்து கதவைத் திறந்தாள். அங்கே ரத்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்த சுரேஸை நாலுபேர் தூக்கி வந்து உள்ளே கிடத்தினர்.

அம்மா “ஐயோ... ஐயோ... என்ன அனியாயம்.... கேட்பாரில்லையா.....” என்று மார்பில் அடித்துக்கொண்டு அழுதாள்.

நடந்தது இது தான்.... ரவியுடன் கூட்டத்திற்குப் போன சுரேஸ், அமைதியாகக் தான் உட்கார்ந்திருந்தான். பக்கத்தில் சிலர் போதையில் அரசியல் பேசி, அடிதடியில் முடிந்தது.... சந்தர்ப்பவாதிகள் சமயம்பார்த்து நழுவி தப்பித்து விட்டனர், ரவி உட்பட. இதையறியாத சுரேஸ், இந்தக் கலவரத்தை வேடிக்கை பார்க்க, யாரோ... யாரையோ.... இரும்புச்செயரைத் தூக்கி அடித்த அடி, சுரேஸின் மண்டையில் விழ, அவன் ரத்தத்தில் குளித்தான். சிறிது நேரத்திலேயே அவனை மருத்துவமனை கொண்டு சென்று.... மண்டையில் நான்கு தையல் போட்டு, வீட்டில் கொண்டு சேர்த்தனர்.

அரை மயக்கத்திலிருந்த சுரேஸ் “முதலாளி... முதலாளி...” என்று பிதற்றிக் கொண்டிருந்தான். மறுநாள் காலையில் விவரமறிந்த முதலாளி அவனைப் பார்க்க வந்தார். இப்போது நல்ல நினைவிலிருந்த சுரேஸ் எழும்ப முயன்றான். முதலாளி கையமர்த்தினார். “சொன்னேனே....கேக்காமப்போய்... .

பாரு..... இப்ப யாரு கஷ்டப்படறா..... நீ ரொம்ப நல்ல பையன்.... ஆனா கர்ணனை மாதிரி சேராத இடம் சேர்ந்து சேற்றில் விழுந்தாய். அதெல்லாம் அரசியலப்பா..... அவனவன் சுயநலத்துல உங்களை மாதிரியாட்களை பலிகடாவாக்கிட்டு, ரத்தத்தைக் குடிச்சுட்டுப் போயிட்டேயிருப்பாங்க.

நீங்களெல்லாம் அவங்களுக்கு **கறிவேப்பிலை** மாதிரி. காரியம் முடிஞ்சப் புறம் கண்டுக்க மாட்டாங்க..... பாரு உங்கம்மா.... அவளுக்காகவாவது நேற்று நீ போகாம இருந்திருக்கலாம். விதி யாரை விட்டது. சரி... சரி.... நடந்ததைச் சொல்லி என்ன பயன். இந்தா இதைச் செலவுக்கு வச்சுக்கோ.... உடம்பு குணமானதும் வா.... இனியாவது இந்த மாதிரி அற்பக் காசுக்கும் குவாட்டருக்கும் ஆசைப் படாம, உழைச்சு சாப்பிடுங்க. அப்பத்தான் ஒடம்புல ஒட்டும். நான் ஒன்னும் முதலாளின்னு ஆகாயத்தில இருந்து குதிச்சிடலை. ஒங்களை மாதிரி அஞ்சுக்கும், பத்துக்கும் ஒழைச்சுத்தான், இன்னிக்கு முதலாளியா இருக்கேன். நாளைக்கு நீயும் ஆவே..... உழைப்ப மட்டும் நம்பு.... ஓசிக்கு அலையாதே.... நல்லா ரெஸ்ட் எடு..... நான் வரேன்....”

- முற்றும் -



வலசைப் பறவைகள்

மரம் தேடி களைத்து அமர்கின்றன

அடுக்கு மாடிகளில்

## ஹைக்கூ கவிகள்

- நரேஸ் -

ஓடும் அருவி

மெதுவாய் அசையும்

சூரியக் கதிர்





# மீண்டும் ஓநாய்களின் ஊளைச்சத்தம்



குரு அரவிந்தன்

இந்த உலகத்தில் இருந்து பத்தாயிரம் வருடங்களுக்கு முன் முற்றாக அழிந்து போன டயர் வூல்வ் (Dire Wolf) என்று சொல்லப்படுகின்ற ஓநாய்களின் ஊளைச் சத்தம் சமீபத்தில் மீண்டும் பூமியில் நிஜமாகவே இயற்கையாகக் கேட்டது என்றால், எங்கிருந்து இந்த ஓநாய்கள் உயிருடன் வந்தன என்று ஆச்சரியப்படுவீர்கள். இதை நீங்கள் நம்பித்தான் ஆகவேண்டும். முடியாது என்று நாங்கள் நினைத்திருந்த இந்த அதிசயத்தை கோலோசல் பயோசயன்ஸ் நிறுவனத்தின் (Colossal Biosciences) அறிவியல் நிபுணர்கள்தான் சாதித்துக் காட்டி இருக்கிறார்கள்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் இறந்து போன ஓநாயின் புதைவடிவங்களில் இருந்து எடுக்கப்பட்ட மரபணுக்களைப் பயன்படுத்தி மறுகட்டமைப்பின் மூலம் நவீன தொழில்நுட்ப குளோனிங் முறையின் உதவியுடன் அவர்களால் இதைச் சாதித்துக் காட்ட முடிந்திருக்கிறது. இந்த ஓநாய்கள் கனடாவின் வடக்கேயும், வெனிசுலாவின் தெற்கிலும் நீண்ட காலத்திற்கு முன் வாழ்ந்ததாக புதைபடிவ சான்றுகள் காட்டுகின்றன. முதலில் இந்த மரபணுக்களை சாம்பல் ஓநாய் செல்களாக மாற்றினார்கள். அதன்பின் ஓநாய்கள் போன்ற பெரிய உருவம் கொண்ட வேட்டை நாய்களை இரவல் தாய்களாகப் பயன்படுத்தினார்கள். அப்படி 1-10-2024 ஆம் ஆண்டு பிறந்த இரண்டு குட்டிகளுக்கு ரோமுலஸ், ரெமுஸ் என்றும் அதன்பின் பிறந்த பெண் குட்டிக்கு கலீசி என்றும் பெயர் சூட்டி இருக்கிறார்கள்.

பழங்கால உரோமானிய புராணங்களில் வரும் இரட்டைச் சகோதரர்களின் பெயரில் இருந்து ஆண் குட்களின் இந்தப் பெயர் எடுக்கப்பட்டது. ஓநாயிடம் பால் குடித்து அவர்கள் வளர்ந்ததாகப் புராணக்கதை கூறுகின்றது. கலீசி என்ற பெண் பெயர் கேம் ஆ∴ப் த்ரோன்ஸ் ஜார்ஜ் ஆர்.ஆர். மார்ட்டினின் ஏ சாங் ஆ∴ப் ஐஸ் அண்ட் ∴பயர் தொடரின் பிரபஞ்சத்தில் டோத்ராக்கி போர்வீரரின் மனைவிக்கு வழங்கப்பட்ட பெயராகும்.

மரபணு திருத்தப்பட்ட இந்த ஓநாய் குட்டிகள் பரந்த தலைகள், அதிக சக்தி வாய்ந்த தாடைகள் மற்றும் தோள்களைக் கொண்டிருக்கின்றன. புதைபடிவ மரபணுவில் கண்டுபிடிக்கப்பட்ட நிறமி மரபணுக்களுடன் இணக்கமான வெள்ளைத் தோல் ஆகியவற்றையும் கொண்டுள்ளன. வீட்டில் வளர்க்கும் நாய்கள் அல்லது சமூகமயமாக்கப்பட்ட சாம்பல் ஓநாய்கள் போலல்லாமல், இந்த ஓநாய் குட்டிகள் மனித பாசத்தில் சிறிதும் அக்கறை காட்டவில்லை என்று அதன் காப்பாளர்கள் குறிப்பிட்டனர்.

இதுபோன்று இப்படிக் காலத்தால் அழிந்துபோன விலங்குகளை உயிர்ப்பிப்பதற்கான முயற்சிக்கு இது ஒரு படிக்கல்லாக அமைந்திருக்கின்றது. இதேபோல மறைந்த உயிரினங்களான நீண்ட தந்தங்களைக் கொண்ட யானை போன்ற உருவம் கொண்ட கம்பளி மம்மத், டோடோ மற்றும் டாஸ்மேனியன் புலி போன்ற இனங்களுக்கும் பழைய மரபணுவைப் பயன்படுத்தி தொழில்நுட்ப வசதிகளோடு உயிரூட்ட கோலோசல் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. விரைவில் கம்பளி மம்மத் குட்டியையும் எதிர்பார்க்கலாம். டைனசோக்களும் அறிமுகமாகலாம். வீட்டில் நாய்க்குட்டி, பூனைக்குட்டி வளர்ப்பது போல இவற்றையும் நீங்கள் விரும்பினால் வீட்டில் வளர்க்கலாம்.



# நாளை உலகை....

- அனுராதா சௌரிரா ஜன் -

### முன்னுரை:

நாளை உலகை நம் இளம் தலைமுறையினர் ஆள வேண்டும் எனில், பெற்றோர்கள் தங்கள் பிள்ளை வளர்ப்பில் கீழ்க்கண்ட குணங்களைக் கொண்டவர்களாகத் தயார் படுத்துவதில்

முனைப்புடன் பங்காற்ற வேண்டியது முக்கியமானதாகிறது!

1.உயர்ந்த குறிக்கோளை அமைத்தல்

2.அதை அடையத் திட்டமிடுதல்

3.அதிகமாக அதற்கென உழைத்தல்

4.தன்னம்பிக்கை

5.சேமிப்பு

6.முதன்மையாக முயற்சித்தல்

7.தலைமைப் பண்புகள் வளர்த்தல்

8.தணியாத ஆர்வம்

9.கற்பனைத் திறன்

10.சுயக்கட்டுப்பாடு

11.தெளிவான சிந்தனை

12.கவனமான தொடர் செயல்பாடு

13.ஒத்துழைப்பு

14.தோல்விகளிலிருந்து கற்றல்

15.சகிப்புத் தன்மை

16.திறமையாகத் தொடர்பு கொள்ளுதல்

17.சரியான நேர நிர்வாகம்

18.இயற்கை நியதிகளை ஏற்று செய்வது

### பொருளுரை:

அடிப்படையான கல்வியின் ஆதாரமான பண்புகளைத் தொடர்ந்து, சகமனிதராக, வெற்றியாளராக, சமூகத்தின் பலமாக, பாலமாக இருப்பது ஒவ்வொருவரின் தனி மனித ஒழுக்கத்துடன் கூடிய உழைப்பே! வாழ்க்கை முறைகளில், நம் வாழ்வியல் மதிப்பை உயர்த்திப் பிடிப்பதே நம் உழைப்பு மட்டும் தான்!

வெறும் ஏட்டுப் படிப்போடு நிறுத்தி விடாமல் பண்பு சார்ந்த அறிவுத் தேவையை அளவின்றி தருவதில் பெற்றவர்கள் தங்கள் பிள்ளை வளர்ப்பில் சேர்த்து கவனித்து வர, நேரம் ஒதுக்கி தங்கள் உழைப்பை போட வேண்டியது அவசியமாகிறது!

தங்களைப் படிக்க வைக்க சிரமப்படும் பெற்றவர்களின் கடின உழைப்புக் கூலியும், நேரமும் தான், தன் கல்விக் கட்டணம் என்பதை ஒவ்வொரு பிள்ளையும் உணரும் வகையில், வியர்வையின் உயர்வினை சொல்லி வளர்ப்பதால், இள வயதிலேயே பொறுப்புணர்வும்,உழைப்பின் உன்னதமும் உணரத் துவங்கி விடுவர்!

இதுவே பின்னாளில் ஏற்படும் பல சமூக அவலங்களை சிறப்பாகத் தவிர்க்கும்! நமக்குள் இருக்கும் பிரச்சனையே நம் எண்ணங்கள்தான்! திரைப்படத்தில் ஒரே நாளில் பணக்காரராக மாறுவதைப் பார்த்து ரசிப்பதில் தவறில்லை! அதுவே நம் வாழ்விலும் நடக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இருப்பவர்கள், சோம்பல் சிறையில் ஆயுள் கைதியா-கவே மாறிவிடுகின்றனர்!

கடின உழைப்பின் எதிரி சோம்பேறித்தனம். நம் எதிர்பாரா தோல்விகளுக்கும், இலக்கைத் தவற விடுவதற்கும், அலட்சியமும், சோம்பலுமே அடிப்படைக் காரணிகளாய் இருக்கின்றன! மாடு ஈன்ற கன்று பிறந்த சில நிமிடங்களிலேயே, தன்னம்பிக்கையோடும், விடா முயற்சியோடும் போராடி எழுந்து நிற்கிறது! பிறந்த கன்று

கொண்டிருக்கும் இந்த சுறுசுறுப்பை சோம்பல் மனிதர்கள் கண்டுணர்ந்தால், எண்ணங்களில் மாற்றம் வரும்!

தற்காலத் தொழில் நுட்ப மாற்றங்களை மனதளவில் ஏற்றுக் கொண்டு, ஒவ்வொரு தளத்திலும் ஏற்படும் அவ்வப்போதைய மாற்றத்திற்குத் தகுந்தாற் போல், தன் தகுதியை, வாழ்வியலை மேம்படுத்த எவரெலாம் தங்களைத் தயார் படுத்தி உழைக்கத் துவங்குகிறார்களோ, அவர்களையே வெற்றி வலியச் சென்று ஈர்த்துக் கொள்ளும்!

நாளைய உலகை நல்ல விதமாய் ஆளப்போவதில் உண்மையும், நேர்மையும் கலந்த உன்னத உழைப்பிற்குப் பெரும் பங்கிருக்கிறது!

நம் அனைவரின் எதிர்பார்ப்பும் எங்கும் எதிலும் வெற்றி மட்டுமே! சிக்கலிலும் வெற்றி, சிறு சிறு செயல்திறனிலும் வெற்றி, எட்ட முடியாததாக இருப்பினும் வெற்றி, நியாயமான உழைப்பின் வெற்றி! வெற்றியின்றி ஏது வாழ்க்கை? வாழ்க்கையின் முழு அர்த்தமும் ஒவ்வொருவரும் தன்னிறுதி வரை தனக்குள்ளிருக்கும் ஆற்றலை வெளிப்படுத்தி உழைத்து முன்னேறுவதில் தான் உள்ளது!

பிறருக்கும் பயன்படுகின்ற வகையில் அடைகிற தனி மனித முன்னேற்றம் தரும் உழைப்பின் வெற்றியே, நாளைய உலகம் நம்மை என்றென்றும் நினைவில் வைத்துக் கொண்டிருக்கும்!

நம் இறுதியாத்திரை ஊரே கடைவிழி நீரொழுக, ஒரு நாள் விடுமுறை என்ற சிறப்பு அறிவிப்பாய் சரித்திரம் படைத்திருக்கும்!

இவை அனைத்திற்கும் மூலதனம் நம் மனமே!

மனித மனம் ஓர் அதிசய சக்தி!

வெற்றி வித்தை தமக்குள்ளே கொண்ட வளம் நிறைந்த நிலம்!

தனி மனிதனின் சிறந்த வழிகாட்டி!

நண்பன், நல் ஆசிரியர்!

கடந்த காலத் தொகுப்பு!

நிகழ் காலத்தை நடத்திச் செல்லும் இயந்திரம்!

எதிர்காலத்தை நிர்ணயிக்கும் சூத்திரதாரி! மகிழ்ச்சியின் ஊற்று!

வெற்றியின் அடித்தளம்!

உழைப்பை ஊக்குவிக்கும் உயிர்நாடி!

மொத்தத்தில் சாதனைகளின் பிறப்பிடம்!

எவருடைய நியாயமான உரிமைகளும் பாதிக்கப்படாமல், ஒழுக்கம் பிறழா உழைப்பு அனைவரிடமும் இறுதிவரை முனைப்பாக இருந்தால், விரும்பியதெலாம் வலியப் பெற்றுத் தரும் வெற்றி, வாழும் நாட்டையும் நாளை வல்லரசாக்கக் கூடிய செழுமையை சேர்த்துக் கொண்டு வளரும் என்பதில் ஐயமே இல்லை!

## முடிவுரை:

கத்திரி வெயிலானாலும், கதிர் உதிர்க்கும் சிரிப்பில், களைப்பின்றி உழைத்து, கழனி சிறக்கக் கை கோர்ப்போம்!

மண்ணின் வாசம் நம் மாண்பில் வீசட்டும்!

மாளா உழைப்பு மொழி வானளாவு பேசட்டும்!

வியர்வைத் துளிகள் உயர்விற்கு வேராகட்டும்!

உழைப்பவரை அழிப்பதென்பது அகிலத்தில் ஒழியட்டும்!

உரமாகும் உள்ளமும் உடலும் வரமாகி உழைப்பால் உயிர்ப்பித்திருக்கட்டும்!

தோளுயர்த்திச் சொல்லுவோம் நாளைய உலகம் நமதே! நமதே!

## ஹைக்கூ

ஆற்று நீரோடை

நிறைந்து காணப்படுகிறது

கழிவு எண்ணெய்ப்படலம்

**- நரேஸ் -**



# ஈழத்தில் வெளிவந்த தமிழ் திரைப்படங்கள் ஒரு தேடல்...

- தமிழ்ப்பாணன் -

### நிர்மலா

இலங்கையில் ஆரம்ப காலப்பகுதியில் வெளிவந்த தமிழ் திரைப்படங்களுள் மற்றொன்று **'நிர்மலா'** என்ற திரைப்படம். இது 15ஆம் திகதி ஆடி மாதம் 1968ஆம் ஆண்டில் வெளிவந்தது. இந்த திரைப்படத்தை தயாரித்து கலாபவன் பிலிம்ஸ் ஊடாக விநியோகத்தை மேற்கொண்டவர் ஏ. இரகுநாதன் என்பவர். இவர் ஈழத்தின் மூத்த கலைஞர்களுள் ஒருவராக விளங்கியவர். இவர் மலேசியாவில் பிறந்து யாழ்ப்பாணம் நவாலியில் வாழ்ந்து வந்தவர் பிற்காலத்தில் பிரான்சு தேசத்தில் வாழ்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. 'நிர்மலா' திரைப்படத்திற்கு




நிர்மலா ஈழத் தமிழ்த்திரைப்படத்தின் சுவரொட்டி

- நன்றி ஈழநாடு

திருமலை பத்மநாதன் இசையமைக்க அருமைநாயகம் என்பவர் நெறியாள்கை செய்திருந்தார்.

மன்னாரைச் சேர்ந்த எம். ஏ. கபூர் ஒளிப்பதிவையும் எஸ். அருமைநாயகம் படத்தொகுப்பையும் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. சில்லையூர் செல்வராசன் மற்றும் முருகையன் ஆகியோர் பாடல்களை எழுதியிருந்தனர். துறையூர் கே. மூர்த்தி



**நிர்மலா திரைப்படத்தின் ஒரு பத்திரிகையின் விளம்பரம் ஒன்றில் இருந்து ஒரு பகுதி**

அவர்கள் எழுதிய கதையை மூலக்கதையாகக்கொண்டு இத்திரைப்படத்தின் திரைக்கதை மற்றும் வசனம் முதலானவை நவாலியூர் நடேசனால் அமைக்கப்பட்டிருந்தது. சந்திரகலா, ஏ. தங்கவேல், ஏ. இரகுநாதன், எஸ். எஸ். சின்னையா, கோகிலா இராஜரத்தினம், எஸ். நாகேந்திரம், விஸ்வநாதராஜா, ஏ. ஆர். சகாப்தீன், டிம். ரி. அரசு, பிரான்சிஸ் ஜெனம், ஆர். கிருஸ்ணமூர்த்தி, எஸ் நாகராசா, ஏ. நற்குணசேகரத், ஐசக் செல்வரத்தினம் மற்றும் துன்னையூர் மகிந்தன் ஆகியோர் நடிகர்களாக பங்கேற்றிருந்தார்கள்.



### மஞ்சள் குங்குமம்

கிங்ஸ்லி எஸ். செல்லையா மற்றும் ஸ்ரீசங்கர் ஆகியோரின் தயாரிப்பில் கீதாலயம் மூவீஸ் ஊடாக உருவாகி வெளிவந்தது ‘மஞ்சள் குங்குமம்’ திரைப்படம். இது இலங்கையில் (பங்குனி மாதம் 14ஆம் திகதி என்று அறியக்கிடைக்கிறது) 1970ஆம் ஆண்டில் வெளிவந்த முழு நீளத் திரைப்படம். இந்த திரைப்படத்தை இயக்கியவர் எம். வி. பாலன். அவருக்கு உதவியாக திரைப்பட நெறியாள்கையில் ஈடுபட்டவர் அன்ரனி ஜீவா. 1969ஆம் ஆண்டு



காலப்பகுதியில் கிங்ஸ்லி செல்லையாவால் மேடையில் உலாவந்த மஞ்சள் குங்குமம் என்ற நாடகத்தினை தழுவியதாகவே இந்த திரைப்படக்கதை அமையப்பெற்றிருந்தது.

ஸ்ரீசங்கர் (மூன்று வேடங்களில்), ஹெலன்குமாரி, எம். உதயகுமார், ரொசாரியோ பீரிஸ், ஏ. நெயினார், சிலோன் சின்னையா, எஸ். ராஜா, மஞ்சுளா, ருத்ராணி, மணிமேகலை மற்றும் எம்.. வி. பாலன் ஆகியோருடன் மேலும் சிலரும் நடிகர்களாக பங்கேற்றிருந்தனர். எம். ஏ. சுபைர் ஒளிப்பதிவாளராக செயற்பட்டிருக்க சுண்டிக்குளி சோம சேகரன் ஒலிப்பதிவை




மேற்கொண்டிருக்கிறார். இந்ததிரைப்படத்தின் பாடல் வரிகளை இக்னேசியஸ் மொறாயஸ் மற்றும் சில்லையூர் செல்வராஜன் எழுத ஆர். முத்துசாமி இசையமைக்க மீனா மகாதேவன், எம். ஏ. குலசீலநாதன், ஆர். முத்துசாமி, மற்றும் சுஜாதா ஆகியோர் பின்னணி பாடியிருக்கிறார்கள்.

### வெண்சங்கு

இது சிங்கள மொழிமூலமான திரைப்படங்களை தயாரித்து வெளியிட்டுக்கொண்டிருந்த ஒரு திரைப்படத் தயாரிப்பாளரான தமிழராகிய டபிள்யூ. எம். எஸ். தம்பு நெறியாள்கைசெய்து தயாரித்து வெளியிடப்பட்ட திரைப்படமே ‘வெண்சங்கு’ திரைப்படம். தயாரிப்பாளர் திரைப்படத்துறையில் குறிப்பிடக்கூடிய விசேடமான அனுபவத்தையும் வரலாற்றையுமுடையவர். அதை பற்றிய விபரங்களை விபரமாக பின்னர் இன்னொரு பதிவில் தருகிறேன். சிங்கள படங்கள் சிலவற்றை தயாரித்தபின் ஒரு தமிழ் படத்தை தயாரிக்கவேண்டும் என அவரது மனதில் உதித்த ஆர்வத்தின் விளைவாகவே ‘வெண்சங்கு’ திரைப்படம் தயாரிக்கப்பட்டது. இந்தத் திரைப்படம் 1970ஆம் ஆண்டு ஆடி மாதம் 31ஆம் திகதி திரையரங்குகளில் வெளியிடப்பட்டதாக அறியக்கிடைக்கிறது. இத்திரைப்படத்துக்கான மூலக்கதையை தம்பு அவர்களே எழுதியிருந்தார். அவரது கதைக்கு திரைக்கதையை சிறில். ஜெ. பெர்ணான்டோ எழுதினார். இவர் ஒரு சிறந்த எழுத்தாளர் ஆவார். ரி. ஆர். பாப்பாவின் உதவியோடு இசையமைப்பாளர் முத்துசாமி பாடல்களுக்கான இசையமைப்பை மேற்கொண்டார் அப்போது கௌசல்யா மற்றும் ராஜு ஆகியோர் பின்னணி பாடியிருந்தார்கள். எஸ். தெய்வேந்திரா ஒளிப்பதிவையும் றிச்சர்ட் டி சொய்சா ஒலிப்பதிவையும் மேற்கொண்டிருந்தனர். ஒளிப்பதிவில் உதவியாக ஏ. எஸ். பத்மநாதன் செயற்பட்டார். றொபின் பொணான்டோ அவர்களுடன் அலெக்சாண்டர் பெர்ணான்டோ இணைந்து சண்டைக் காட்சிகளை அமைத்திருந்தார்கள். இவர்கள் அப்போது ஸ்ரண்ட் கலைஞர்களாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

அந்த காலப்பகுதியில் பிரபலமான நாடக நடிகனாக அடையாளம் காணப்பட்ட அராலியைச்சேர்ந்த புவனேந்திரன் என்பவர் இந்தத் திரைப்படத்தின் கதா நாயகனாக நடித்திருந்தார். அதேபோலவே சிறந்த மேடை நாடக நடிகையாக அந்த நாட்களில் அறியப்பட்ட குமாரி ராஜம் என்பவர் கதாநாயகியாக நடித்திருந்தார். அநேகமானோரால் பல்கலை வேந்தனாக அறிப்பட்டிருந்த லடிஸ் வீரமணி திரைப்படத்தின் வில்லன் கதாபாத்திரத்தை ஏற்றிருந்தார். ரொசரியோ பிரிஸ், எம் . ஏ ஜவ்பார், ஜீ. பீட்டர் தேவன், ஏ. எஸ். ராஜா, நமசிவாயம், ஓ. நாகூர், சுந்தர்ராஜ், ரி. எஸ். பிச்சையப்பா, சாமுவேல், தங்கராஜா, தியாகராஜா, அல்பிரட், பாயிஸ் மற்றும் கிஸ்மத் ஆகியோருடன் திருகோணமலையைச் சார்ந்த இந்திராணி என்பவரும் சேர்ந்துகொண்டு பாத்திரங்களேற்று நடித்திருந்தார்கள். நடிகைகள் வரிசையில் இந்திராணி மட்டுமன்றி வானொலி நட்சத்திரம் சுப்புலட்சுமி, நூர்ஜஹான், தேவி கணேசானந்தன், பேபிராணி, சந்திரா, மேரி கமலா, வனஜா, ருத்திராணி ஆகியோர் பெண்கதாபத்திரங்களில் நடித்திருந்தார்கள்.

தொடரும்

# நேரிசை வெண்பா மரபுக் கவிகள்

## பசுமை காப்போம்.!



வஞ்சமிலா நேர்மையுடன் வாழ்வளித்தப் பாரினில்
பஞ்சமதை ஓட்டும் பசுமையைக் -- கொஞ்சிடில்
நெஞ்சார இன்பம் நிறைத்தபின் உள்ளமும்
பஞ்சாய்ப் பறக்குமதைப் பார்

-- சுவாமிதாஸ் குமாரசுவாமி –

## பசுமை காப்போம்.!



அழிந்து வரும்பசுமை அற்றுவிடி னேது
பொழியும் மழையின் பொலிவு? - செழிப்பும்
வளமும் களிப்பை வழங்கும் உலகின்
இளமையைக் காப்போம் இணைந்து

-- தனராஜ் பாப்பணன் –

## பசுமை காப்போம்.!



ஊனமில்லாப் பாரினை உயிர்த்தெழச் செய்திட
ஊனமற்றச் சுவாசம் உயிர்க்கும் - கானகம்
பேணிடப் பெருமழை பேரூற்றாய் வார்க்க
ஏணியா யிருந்து ஏற்று

-- ஈழம் மனோ –

## பசுமை காப்போம்.!



உலகமே வெப்பம் உருமாறிப் போக
நிலவும் அளவின் நிலையும் - கலகம்
பலவகை உள்ளதே பார்த்திடப் பச்சை
நலமது குன்ற நலிவு

-- கு. கதிரேசன் –

# நேரிசை வெண்பா மரபுக் கவிகள்

## பசுமை காப்போம்.!



*பசுமை நிறைந்த பருத்த வனங்கள்*
*திசுக்கள் வளர்க்கத் திடம்...பார் - அசுத்தம்*
*அழிக்கும் அழகுக்கும் அற்புதம் நிலையாம்*
*விழிகள் விரும்பும் வினை*

-- தவத்திரு கண்ணன் பாரதி --

## பசுமை காப்போம்.!



*மரங்கள் நடுவோம் மழைநீர் பெறுவோம்*
*பரமன் அருளால் பதநீர்-வரமாம்*
*பனைகள் வளர்போம் பசுமை நிலங்கள்*
*தனையே காப்போம் தழைத்து.*

-- கோவி கேசவன் --

**பழமொழி தெளிவோம் :-**

**“பந்திக்கு முந்து படைக்கு பிந்து'**

இந்த பழமொழி, சாப்பிடுவதற்கு முன்னாடி போ என்றும், படையில் பின்னாடி இரு என்று தவறாக சொல்லப்படுகிறது.

**உண்மையான பொருள் :**

பந்தியில் உண்ணும் போது வலது கை முந்திச் செல்கிறது. போர்படையில் வில் அம்பினை எய்தும் போது கை பிந்திச் செல்கிறது. “பந்திக்கு முந்து'ம் கை “படைக்கு பிந்து'ம் கை இதுவே சரியான பொருளாகும்.

# ஆறாம் நிலத்திணைப் பெண்களின் சிறுகதைத் தொகுப்பு வெளியீடு

- சுலோச்சனா அருண் -



கனடாவில் இயங்கும் கிராமத்து வதனம் பெண்கள் அமைப்பினர் முற்றிலும் கனடிய தமிழ் பெண்களே எழுதிய சிறுகதைகளைத் தொகுத்து ‘ஆறாம் நிலத்திணை சிறுகதைத் தொகுப்பு’ என்ற பெயரில் சென்ற 6 ஆம் திகதி, ஏப்ரல் மாதம் 2025 அன்று எற்ரோபிக்கோ நகரில் உள்ள வுாளைவடநவழறபெ ஊழஅஅரநெை-வல ஊநவெசந மண்டபத்தில் உலக மகளிர் தினக் கொண்டாட்டத்தின் போது வெளியிட்டுப் புலம்பெயர்ந்த கனடிய மண்ணில் சாதனை ஒன்றைப் படைத்திருக்கிறார்கள்.




இந்த நிகழ்வில் பேராசிரியர் இ.பாலசுந்தரம், முனைவர் பார்வதி கந்தசாமி, முனைவர் வாசுகி நகுலராசா, காப்பாளர் நவா கருணரட்ணராசா, உதயன் பத்திரிகை ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம், எழுத்தாளர் குரு அரவிந்தன், கவிஞர் அகணி சுரேஸ், ஒன்ராரியோ மாகாண அரசின் மாகாணமன்ற உறுப்பினரும் இணையமைச்சருமான வியேஜ் தணிகாசலம் மற்றும் ஒன்ராரியோ அரசியல் பிரமுகர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் என்று பல தரப்பினரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டின் போது, முதலில் முனைவர் பார்வதி கந்தசாமியின் வாழ்த்துரையும் கிராமத்து வதனம் பெண்கள் அமைப்பின் நிறுவுனர் கமலவதனா சுந்தாவின் நூல்அறிமுக உரையும் இடம் பெற்றன. அதைத் தொடர்ந்து தொகுப்பாசிரியர் எழுத்தாளர் குரு அரவிந்தனின் வெளியீட்டுரை இடம் பெற்றது. முனைவர் வாசுகி நகுலராசாவின் ஆய்வுரையைத் தொடர்ந்து கமலவதனா சுந்தா

அவர்கள் சிறுகதைத் தொகுப்பு நூலை வெளியிட்டு வைத்தார்.



தொகுப்பாசிரியர் எழுத்தாளர் குரு அரவிந்தன் தனது உரையில், நேரடியாகவும் மெய்நிகர் வழியாகவும் நடந்த தனது சிறுகதை பயிலரங்கில் பங்கு பற்றிய அனேகமான ஆரம்ப எழுத்தாளர்களின் கதைகளும் இதில் இடம் பெற்றிருப்பதாகவும் இளைய தலைமுறையினர் இப்பயிலரங்கில் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தங்கள் பங்களிப்பைச் சிறப்பாகச் செய்திருப்பதாகவும் குறிப்பிட்டார். மேலும் 26 கனடிய தமிழ்ப் பெண்களின் சிறுகதைகள் இந்தத் தொகுப்பில் இடம் பெற்றிருப்பது புலம்பெயர்ந்த மண்ணில் தமிழ்ப்பெண்கள் ஏற்படுத்திய ஒரு சாதனையாகும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இச்சிறுகதைத் தொகுப்பில், பூமிகா அன்புதாசன், மாலினி அரவிந்தன், சன்ரா யூட் பாலேஸ்வரன், குலமணி பிரான்சிஸ், சசிகலா ஜீவானந்தன், மணிமேகலை கைலவாசன், பத்மா கரு, சுந்ரீஸ்வரி காசிப்பிள்ளை, கேதா கிருபராஜன், நாகேஸ்வரி ஸ்ரீகுமரகுரு, விஜயராணி மதியழகன், அர்ச்சனா மோகனகுமார், நவகீதா முருகண்டி, யோகநாயகி மூர்த்தி, கௌசல்யா பார்த்தீபன், கலைமகள் புஸ்பநாதன், விமலாதேவி புசுப்பநாதன், கஜலக்ஸி புவனேஸ்வரன், நஸ்வியா சற்குணராசா, சுமதி செல்வா, இளவரசி செந்தில்குமார், வாணிசிறி சிவபாதசுந்தரம், செல்வி சோதி, கமலவதனா சுந்தா, தருணி தியாகராசா, கவிநயா விஜயதர்சன் ஆகியோரின் சிறுகதைகள் இடம் பெற்றிருக்கின்றன. இதில் எழுதிய இளைய தலைமுறையினர் கனடாவில் பிறந்து வளர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.



பல எழுத்தாளர் குரு அரவிந்தன் தொகுத்து வெளியிட்ட இச்சிறுகதைத் தொகுப்பின் அச்சாக்கத்தை ஜே. ஜே பிரின்ரேசும், அட்டைப்படத்தை செல்வி நவீனி இராசையாவும், கணினி அச்சு உதவியை பிரவீனி இராசையாவும் பொறுப்பேற்றுச் செய்திருந்தனர். இந்த சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டின் போது,



# வடதுருவத்தில் ஒரு எரிமலைத்தீவு

– குரு அரவிந்தன் –

ஐஸ்லாந்து என்ற ஒரு சிறிய தீவு அத்திலாண்டிக் சமுத்திரத்தில், வடதுருவ எல்லையில் இருக்கின்றது. 103,000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்ட, ரெக்காவிக்கைத் தலைநகராகக் கொண்ட இந்த எரிமலைத் தீவுக்குச் செல்வதற்கு எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. படகில் சென்று வடதுருவத் திமிங்கிலங்களை அருகே பார்க்கக்கூடியதாக இருந்தது. இத்தீவில் சாமத்திலும் சூரியனைப் பார்க்க முடியும். நான் பயணத்தை முடித்துக் கொண்டு வந்ததன் பின் ஒருநாள் 24 மணி நேரத்தில் சுமார் 2200 நிலவதிர்வுகள் இத்தீவில் ஏற்பட்டிருக்கின்றது. இதன் காரணமாக எந்த நேரமும் எரிமலை வெடிக்கலாம் என்று அங்குள்ள மக்கள் பயந்து போனார்களாம். இந்தச் சிறிய தீவில் சுமார் 30 மேற்பட்ட எரிமலைகள் இருக்கின்றன. பூமிக்கடியில் உள்ள தட்டுகள் அடிக்கடி முட்டிக் கொள்வதால், இந்த நிலநடுக்கம் ஏற்படுகின்றது. இங்கே உள்ள எரிமலை ஒன்று 2010 ஆம் ஆண்டு வெடித்த போது விமானப் போக்குவரத்தே அப்பகுதியில் ஒருவாரகாலம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்த எரிமலை வெடிப்பால், புகையும், சாம்பலும் பல மைல் தூரங்களுக்குக் காற்றோடு பரவி சுற்றுவட்டத்தை மாசடைய வைத்திருந்தன.



ஐஸ்லாந்தின் பொருளாதார வசதிகளுக்காகச் சுற்றுலாப் பயணிகளையே அவர்கள் அதிகம் நம்பியிருக்கிறார்கள். பொருட்களை இறக்குமதி செய்வதால் பொருட்களின் விலை இங்கு சற்று அதிகமானது. ஆங்கிலமும் பேசும் இங்குள்ள மக்கள் மிகவும் அன்பாகப் பழகக்கூடியவர்கள். வீடுகள் கூட்டமாக இல்லாமல், தனித்தனியாகவே அங்குமிங்குமாக இருக்கின்றன. மலைச்சரிவில் உள்ள சில வீடுகளின் கூரைகளைப் புற்கள் வளர்ந்து மூடியிருக்கின்றன. பபின் என்று சொல்லப்படுகின்ற அழகிய பறவைகளை இங்கு காணமுடிந்தது. செம்மறி ஆடுகளும், குதிரைகளும் நிறை இருக்கின்றன. சிக்காக்கோவில் ‘பான்பிட்ஸா’ பிரபலமாக இருப்பது போல, இங்கே கிடைக்கும் ‘ஐஸ்லாண்டிக் கொட்டோக்’ மிகவும் ருசியானதால் பிரபலமானது. வரிசையில் நின்றுதான் வாங்கவேண்டி வந்தது.

‘நோர்ஸ்’ இனத்தைச் சேர்ந்த வைக்கிங் காலப்பகுதியில்தான் இத்தீவில் குடியேற்றங்கள் எற்பட்டன. சுமார் 3 லட்சம் மக்கள்தான் இங்கு வசிக்கிறார்கள். அரச கட்டுப்பாடுகள் காரணமாக, பெற்றோர் விரும்பியவாறு பிள்ளைகளுக்கு இங்கே பெயர் வைக்க முடியாது. தொடர்வண்டிகளும் இங்கு இல்லை. இவர்களது முன்னோர்கள் ஒரு காலத்தில் பயங்கரமான கடற்கொள்ளையர்களாக இருந்தார்கள். கழுத்தைக் கோடாரியால் வெட்டுவது, மரத்திலே கட்டி உயிரோடு எரிப்பது போன்ற தண்டனைகளைக் கொடுத்தார்கள். இங்குள்ள காட்சியகத்தில் இது போன்ற தண்டனைக் காட்சிகளை நிஜமாக நடப்பது போலப் பார்க்க முடிந்தது. இன்னுமொரு காட்சிப் பொருளாக 2 ஆம் உலகயுத்தத்தில் ஜெர்மனியால் சுட்டு விழுத்தப்பட்ட



ரஸ்ய விமானத்தின் உடைந்த பாகங்கள் இருக்கின்றன. ஆனால் அதில் அமெரிக்கச் சின்னம் பொறிக்கப்பட்டிருந்ததைக் கவனித்த போது ஆச்சரியமாக இருந்தது. இதைப்பற்றித் தேடுதல் செய்தபோது அமெரிக்காவிடம் இருந்து ரஸ்யா அந்த விமானங்களை வாடகைக்கு எடுத்திருந்தது தெரியவந்தது.

நிலத்திற்கு அடியில் இருந்து திடீர் திடீரென ஒரு பனைமர உயரத்திற்கு நீர் ஊற்றுக்கள் சீறிப்பாய்கின்றன. நிறைய நீர்வீழ்ச்சிகளும் இருக்கின்றன. சுடுதண்ணிக் குளங்களும் இங்கு இருக்கின்றன. வீடுகளைச் சூடாக்க இந்த சூடான தண்ணீரையும், நிலவடிச் சூட்டுகாற்றையும் பயன்படுத்துகின்றார்கள்.



தீவைச் சுற்றி வருவதற்கு நல்ல நிலையில் ‘றிங்ரோட்’ என்ற நெடுஞ்சாலையை அமைத்திருக்கிறார்கள். வண்டியை வாடகைக்கு எடுத்து விரும்பிய இடங்களைச் சென்று பார்க்கக்கூடிய வசதிகள் உண்டு. பனிக்காலத்தில் சிறிய வீதிகளை மூடிவிடுகிறார்கள். இக்காலத்தில் ‘நொதேன் லைட்’ என்று சொல்லப்படுகின்ற வானத்தைப் பல வர்ணங்களில் பார்க்க முடியும். நோர்வே நாட்டு மன்னனின் ஆட்சிக்காலத்தில் இந்தத் தீவுகளுக்குப் பெயர்சூட்டும் போது தவறு செய்து விட்டார்கள். மாலுமிகள் தகவல் தெரிவித்தபோது ஒரு தீவு பனியாலும், அருகே உள்ள இன்னும் ஒரு தீவு பச்சைப் பசேலென்று தாவரங்கள் சூழ்ந்திருப்பதாகவும் அறிவித்தபோது, நேரடியாகச் சென்று பார்க்காததால் அருகே இருந்த பனியால் சூழப்பட்ட கிறீன்லாந்திற்கு அந்தப் பெயரையும், தாவரங்கள் வளர்ந்திருந்த இந்தத் தீவக்கு ஐஸ்லாந்து என்றும் வரலாற்றுத் தவறு காரணமாகப் பெயர் நிலைத்து விட்டது.



இங்குள்ள துறைமுகத்திற்கு அருகே சூடான நீ-ரோட்டம் ஓடுவதால் துறைமுகத் தண்ணீர் உறைவதில்லை. குற்றங்களே நடக்காத நாடு என்பதால் வீதிகளில் பொலிசாரைக் காணமுடியாது. நான் அங்கு நின்ற நாட்களில் ஒரே ஒரு பொலிஸ்காரரைக் கோப்பிக் கடையில் சந்தித்து உரையாட முடிந்தது. பாதுகாப்பு வேலிகள் இல்லாததால், சில இடங்களில் தரை பிளந்து அதிலிருந்து புகை வெளிவருவதையும், சுடுநீர் கொதிப்பதையும் அருகே சென்று பார்க்கமுடிந்தது. சுற்றுலாப் பயணிகளுக்குப் பிடித்த இடமாக இது இருக்கின்றது.

# கரிசல் மண்ணில் ஒரு காவியம்

## தொடர் நவீனம்

## அத்தியாயம் --2

அவள் வீட்டையே தினமும் என் கால்கள் ஓயும் வரை சுற்றிச்சுற்றி வருகின்றன.ஆனால் சிறைக்குள் அடைப்பட்ட அந்தச்சிட்டை மட்டும் என்னால் காணமுடியவில்லை. கால்கள் ஓய்ந்தாலும் என் இளம் மனம் வாடாமல் தேடிக்கொண்டே இருக்கிறது. என்னைப்பற்றிக்கூட நான் அதிகமாக கவலைப்படவில்லை. அவளுடைய சுதந்திரம் இப்படி அநியாயமாக பறிக்கப்பட்டுள்ளதே என்பதுதான் என் ஆதங்கம். பாவம் பாடிப்பறந்த அந்தப்பச்சிளம் குருவி எதற்காக இன்று பூட்டி வைக்கப்பட்டுள்ளது என்பது எனக்குப்புரியாவில்லை. கேட்டால் அவள் வயதுக்கு வந்துவிட்டாள் என்கிறார்கள்.

பருவம் அடைந்த பெண்ணை வயதுக்கு வந்துவிட்டாள் என்ற ஒரு காரணம் காட்டி அவள் ஒரு பாதுகாக்கப்படவேண்டிய பொருள் எனக் கருதி அவளைப் பிற ஆண்களின் கண்களில் படாமல் ஒளித்து வைப்பது அறிவுத்தனம் என்பது அவர்களின் அப்பாவித்தனம். பெண் என்பவளும் சிந்திக்கத் தெரிந்த ஒரு மானுடப்பிறவிதான் என்பதை சமுதாயம் இன்னமும் ஒப்புக்கொள்ள மறுப்பதை எண்ணும்போது என்போன்ற மனித நேயம் மதிப்பவர்களுக்கு வலிக்காமலில்லை. எழுதுவதும் வாசிப்பதும்: பேசுவதும் பழகுவதும் சமுதாயத்தில் என்ன மாற்றம்



விளைவித்துள்ளது என்பதும் எனக்கு ஏதும் புலப்படவில்லை. அதை புரிந்துகொள்ளும் வயதும் அனுபவமும் எனக்கு அப்போது இல்லை. இப்போதும் அந்நிலை சில கிராமங்களில் சில குடும்பங்களில் இல்லாமலில்லை.

**கொ.பெ.பி.அய்யா.**

இந்நிலை மனித மனங்களில் இன்னமும் ஏன் மிஞ்சியுள்ளது. பெண்களைப் பற்றிய ஐயமா அல்லது அச்சமா?கல்வியறிவு வளராமல் இருந்த அந்தக் காலம்தான் அப்படியென்றால் இன்று கல்வியறிவு வளர்ந்துள்ள நிலையிலும் தொடர்வதும் கவலையாகத்தான் உள்ளது. பாரதி சொன்ன புதுமைப்பெண்கள் வரிசையாக வரத்தொடங்கிவிட்டார்கள். காலத்தின் கட்டாயம் பெண்களை கல்வி கற்கவும் பணிகளில் பரவலாக கடமை ஆற்றவும் காலம் கனிந்து வருவது ஒரு பக்கம் மகிழ்ச்சியாக இருந்தாலும் பெண்களுக்கு ஏற்படக்கூடிய வன்கொடுமைகளை பார்க்கும் போது மீண்டும் பெண்களின் உரிமை பறிக்கப்பட்டு முந்திய நிலைக்கே நகர்தப்படுவார்களோ என்ற கவலையும் துளிர்க்கிறது.

இப்போது புரிகிறது அன்று ஏன் அவளுக்கு அந்நிலை என்று. அவள் வீட்டிலிருந்து என் வீட்டை பார்க்கும் வசதியாக ஜன்னல் ஒன்று உண்டு. அந்த ஜன்னல் பக்கமாக நின்று பாட்டொன்று பாடுவாள். அந்தப்பாட்டு இப்போதும் என் நினைவுகளில் முனுமுனுத்துக்கொண்டே இருக்கிறது.

''கண்ணா கருமை நிறக் கண்ணா''

எனும் அந்தப்பாடல்தான் அது. ஆமாம் நான் கொஞ்சம் கருப்புதான். ஆனாலும் பார்க்கப் பார்க்க என்னை யாருக்கும் பிடிக்கும். அப்படித்தான் அவளும் சொல்வாள். அவளோ தங்க நிறம். தகதகவென தாராளமாய் இறைவன் அப்படியொரு வண்ணத்தை அவளுக்கு அள்ளி வழங்கியிருந்தான். அவள் சிரித்துவிட்டால் போதுமே அப்பப்பா மாலை நேர இளஞ்சிவப்பின் ஊடே வெள்ளொளி கீறிக்கொண்டு வருவதுபோல் ஒரு ஈர்ப்பு.



அப்படிப்பட்ட அழகுச்சிலையை அலங்கரித்து கம்பிக்கதவுகளுக்குள் பூட்டி வைத்தாற்போல் அந்த மங்கிய ஒளியிலும் அவள் பிரகாசிப்பாள். இப்படிதான் தினம் தினம் அவள் தரிசனம்.அதுவும் அது கிராமத்து ஜன்னல். முகம் மட்டும்தான். தரிசனம்.சிறைச்சாலையில் கூட அப்படித்தான். அனால் எட்டாத உயரத்தில் என்பார்கள். அவளுக்கு அது எட்டும் தூரம். ஆனால் நானோ எட்டி எட்டித்தான் குதிக்கவேண்டும். நான் குதிக்கக் குதிக்க அவள் சிரிப்பாள். அவள் சிரிக்கச்சிரிக்க நான் குதிப்பேன்.

வாழ் நாளில் நிகழும் எத்தனையோ சந்திப்புகள். ஆனால் அவை அத்தனையும் நினைவில் நிற்பதில்லை. சில நினைவுகள் மட்டுமே அழியாமல் நாளெல்லாம் நெஞ்சில் இன்னும் நித்தம் நித்தம் புதுப்பிக்கப்படுகின்றன. ஒரு நாள் வழக்கம்போல் அந்தப்பாட்டைப் பாடினாள். அந்தப் பாட்டைக்கேட்டாலே எனக்குள்ளே ஒரு இனம் புரியாத துள்ளல். ஜன்னலைத் தேடி ஓடோடி வந்தேன்.அப்போது என்னைக் கைஜாடையில் மெல்லிய குரலோடு

“டேய் ராசா உள்ளே வாடா “

என அழைத்தாள்.பதிலுக்கு நானும் மெல்லிய குரலில்

எதுக்கு? உங்க ஆச்சி இருக்கும். அது “என ஆசையிலும் அச்சத்திலும் அசடு வழிந்தேன்.

“யாருமே இல்ல. ஆச்சி வயலுக்குப் போய்ட்டா. அம்மா. குளக்கரைக்கு துணி துவைக்கப் போய்ட்டா.அவங்க வர நேரமாகும்.வா!”

எனத் தைரியம் கூறி உள்ளே அழைத்தாள்.”

அப்படியா. சரி வாறேன்.”

எனத்துள்ளிக் குதித்து கஞ்சிக்கே வழி இல்லாதவன் கையில் பஞ்சுமிட்டாய் கிடைத்தால் எப்படி இருக்கும்? அப்படியொரு உற்சாகத்தில் வாசல் பக்கமாக ஓடினேன். சாத்தியிருந்த கதவை மெல்லத் தள்ளினேன். முன்பெல்லாம் எந்தப் பயமோ தயக்கமோ இன்றி சர்வசாதாரணமாக அவள் வீட்டிற்குள் போவேன் வருவேன். குரிசல்

# கரிசல் மண்ணில் ஒரு காவியம்

## முன்பக்க தொடர்ச்சி

ஆனால் இன்று ஏனிந்த அச்சம். அதோடு ஒரு தயக்கம். புரியவில்லை.

கதவைப் பிடித்துக்கொண்டே நின்றேன். யார் வந்தாலும் சத்தம் இல்லாமல் ஓடிவிடலாம். அப்படியொரு வசதியில் உசார் நிலையில் நின்றேன். என்னிலையைப்பார்த்த அவள்

“என்னடா இது பிச்சைக்காரன் மாதிரி. உள்ள வாடா”என்றாள்.

இல்ல.............பரவாயில்ல இருக்கட்டும். ஆச்சி திடு திப்புன்னு வந்தாலும் வந்துரும். அது ஏதாவது சொல்லி உன்னத்தான் பேசும். சொல்லு எதுக்குக் கூப்பிட்ட.”எனப்பயந்த நானும்.

“அடப்பாவி....ஏண்டா இப்படிப் பயந்து நடுங்கிற”

என தைரியத்தில் அவளும். மாறி மாறி சொன்னதையே திரும்பத் திரும்பப் பேசிக்கொண்டிருந்தோம். அவள் கதவுக்குப்பின்னாலும் நான் கதவுக்கு இடையிலும் நிற்கிறோம். ஆனால் எப்போதும் போலும் உள்ள அந்த பழைய விளையாட்டுத்தனம் இப்போது எங்கே போனதோ விளங்கவில்லை. அவள் உள்ளே அழைக்கிறாள் நான் மறுக்கிறேன். ஏதோ ஒன்று என்னை அவளிடமிருந்து என்னை விலகி நிற்கச்சொல்கிறது.ஏன்?

**(தொடரும்.)**


**விசேட திறன்மிக்க வளவாளர்களால் வழங்கப்படும் பயிற்சி நெறிகளில் கலந்துகொள்ள ஆர்வமுள்ளவரா நீங்கள்**

| | |
|---|---|
| தலைமைத்துவம் | Leadership |
| முகாமைத்துவம் | Management |
| சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் | Marketing management |
| தொழில் முயாற்சியாண்மை | Entrepreneurship |
| நிறுவன முகாமைத்துவம் | Organizational Management |
| திட்டச் சக்கர முகாமை | Project Cycle Management |
| வியாபாரத்திட்ட தயாரிப்பு | Business Plan Development |
| தர்க்கச் சட்ட வரைபு | Logical Framework Development |
| கண்காணிப்பும் மீளாய்வும் | Monitoring and Evaluation |
| பங்கேற்பு கிராமிய கணிப்பீடு மற்றும் | Participatory Rural Appraisal and Need Assessment |
| வசதிபபடுத்துதல் மற்றும் முன்வைப்புத்திறன் | Facilitation and Presentation Skills |
| பயிற்றுவிப்பாளர் பயிற்சி | Training of Trainers |
| வியாபார ஆலோசனை | Business Counseling |

**தொடர்புகொள்ளுங்கள்: வியூகம் அபிவிருத்தி ஆலோசனைகள்**

(Viuham Development Consultancies) 0771682536

# பசுமை காப்போம்



~ எஸ். எஸ். கவி செல்வா ~



பசுமை காப்போம்

இயற்கையே உன்னை

ரசிக்காத ஆளில்லை.

உன்னை ரசிக்க

தெரியாதவன் ஆளேயில்லை.

பசுமையின் அரவணிப்பில் வாழும்

ஒவ்வொரு மனிதனும் எந்த நோயிக்கும்
அடிமை இல்லாதவனாய்

வாழ்கிறான்.

ஓராயிரம் மின் விசிறிகள் கொண்டு

நீ காற்று வாங்கினாலும்

ஒரு பசுமை நிறைந்த மரத்தின்

காற்றுக்கு ஈடாகுமா ஆயிரம் மின் விசிறிகள்.

மலையோரம் வாழும்

மக்களின் வாழ்க்கை சுகாதாரம் ஆனது ஆனந்தமானது.

ஊரில் வாழும் மக்களின் வாழ்க்கை

சுகாதாரம் அற்றது.

சந்தோசம் இல்லாதது.

மரம் செடிகள் இருக்கும் இடத்தில்

ஊற்றுகள் உருவெடுக்கும்

ஆடுகள் மாடுகள் காட்டு விலங்குகள்

தாகத்தை போக்கும் தாயாக இருக்கும்

வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம்

வீதிக்கு 10 மரம் வளர்ப்போம்.

காற்றோட்டம் உள்ள காற்றை சுவாசிப்போம் நோய்
நொடியின்றி

அனைவரும் வாழ்வோம்.

பசுமை தாயே வணக்கம்




கடந்த வைகாசி முப்பத்தோராம் திகதி தயாகத்தின் சில பிரதேசங்களின் திரை அரங்குகளில் ஈழத்துப்படைப்பாக வெளிவந்தது '**தீப்பந்தம்**' முழு நீளத் திரைப்படம். எமது படைப்புகளை பார்க்கவேண்டும் என்பது எப்போதுமே இருக்கக்கூடிய எனது விருப்பம். அந்த விருப்பத்தேடு திரைப்படத்தை பார்வையிடச் சென்றேன். யாழ்ப்பாணம் செல்வதற்கு இயலாமல்போன காரணத்தால் கொழும்பு தெமட்டகொடையில் அமைந்துள்ள றீகல் திரையரங்கில் பார்வையிட முடிந்தது. மிகப்பெரிய அளவிலான விளம்பரங்கள் படத்தைப்பற்றி வெளிவந்திருந்ததால் கொழும்பு வாழ் தமிழ் மக்கள் அதிகமானவர்கள் திரைப்படத்தை பார்க்க வருவார்கள் என எனது எதிர்பார்ப்பு, ஆனால், என்னோடு சேர்த்து பத்து விரல் எண்ணிக்கைக்குள் வந்திருந்தவர்கள் எண்ணிக்கை அடக்கம். நாளுக்கு நாள் படைப்புக்கு படைப்பு எமது தாயகக் கலைஞர்களின் படைப்புகளின் தரம் உயர்வடைந்தே செல்கிறது என்பதை இந்தப் படத்தை பார்த்ததை வைத்துக்கொண்டு என்னால் உறுதியாகக் கூறமுடியும். சிறந்த கலைஞர்கள் பலர் இதில் பங்குபற்றியிருந்தமை திரைப்படத்தின் தரத்திற்கு மேலும் வலுச் சேர்க்கிறது.

# தீப்பந்தம்

## ஈழத்தின் முழு நீளத் திரைப்பட வெளியீடு

சரி அது இருக்கட்டும் விட்டுவிடுவோம் ஏனைய தமிழ்த் திரைப்பட படைப்பாளர்கள், வெவ்வேறு நிகழ்வுகள் பற்றியும் தென்னிந்திய பிரபலங்கள் பங்குபற்றும் இசை நிகழ்ச்சிகள், கோவில் திருவிழாக்களில் நடக்கும் புதினங்கள், என்று இவற்றையெல்லாம் பற்றி அபரிமிதமாக அரட்டையடிக்கும் பல சமூக ஊடக ஜாம்பாவான்கள் யாரையும் காணக்கிடைக்கவில்லை. யாழ்ப்பாணத்திலும் ஒரு சிலரைத் தவிர ஏனையவர்களை காணக்கிடைக்வில்லை எனத்தான் அறிகிறேன். அதுமட்டுமல்ல பல்வேறு விடயங்களைபற்றி அளவுக்கதிகமாகவே தகவல்களைப் பரிமாறி தங்கள் ஊடகத்தை உச்ச நிலையில் காண்பிக்கும் எமது ஊடகங்கள் கூட அவ்வளவு பெரிதாக இந்த திரைப்படத்தைபற்றி அலட்டிக்கொண்டதாக தெரியவில்லை.

எங்கள் படைப்பு எம்மவர் படைப்பு அவற்றை ஊக்குவிக்கவேண்டும், உயர் தரத்திற்கு வளர்த்தெடுக்க வேண்டும், அனைவரும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று வாய்கிழிய பெரிய மேடைகளிலும் பொது வெளிகளிலும் தம்பட்டம் அடிக்கும் பிரமுகர்கள்கூட இந்த திரைப்படத்தைப்பற்றி ஏனோ பெரிய அளவில் எதனையும் பேசத்துணியவில்லை.

மேலே குறிப்பிடப்பட்ட விடயங்கள் இந்தத் திரைப்படத்திற்கு மட்டுமல்ல தாயத்ககதில் இருந்து வெளிவருகின்ற, இதற்கு முன்னர் வெளிவந்த ஏனைய திரைப்படங்களுக்கும் அதே நிலைதான் இருந்தது. குறிபிட்டவர்களுள் ஒரு சிலர் விதிவிலக்கே அவர்கள் எப்போதும் போல தங்கள் பங்களிப்பை வழங்கத் தவறவில்லை என்பதையும் இங்கு குறிப்பிட்டாவேண்டும்.

ஒரு திரைப்படத்தை தயாரிப்பது என்பது சாதாரணமான விடயம் அல்ல. தாயகத் திரைப்பட வெளியீடுகள் எதிர் நோக்கும் பல சவால்கள் மற்றும் பிரச்சனைகள் பற்றி நான் ஏற்கனவே எனது பதிவுகளில் ஆழமாக ஆய்ந்து கிடைத்த பெறுபேறுகளை வைத்துக்கொண்டு வெளிப்படுத்தியிருக்கிறேன். திரைப்படத்துடன் தொடர்புடைய விடயங்களை தரக்கூடிய வேறுபல விடயங்கள் பற்றியும் தொடர்ந்து எழுதிவருகிறேன். அதை எனது தமிழ்க்கடமையாக நான் கருதுகிறேன்.

சாதாரணமாக ஒரு இசை நிகழ்வுக்கு நெரிசல் தாங்க முடியாத அளவுக்கு திரண்டு எங்கள் மகிழ்சியை வெளிப்படுத்துகின்ற நாம் ஏன் எமது படைப்புகளுக்கு, எமது கலைஞர்களின் வெளியீடுகளுக்கு அத்தகையதொரு ஆதரவை வழங்க முன்வருவதில்லை. இவர்களை ஊக்கப்படுத்துவதும் ஆதரவளிப்பதும் எமது தலையாய கடமையில்லையா. யாழ்ப்பாணத்தில் 1வது நாள் பார்வையிடச் சென்ற மக்கள் அதிகமாக இருந்தனர். அவர்களில் அநேகமானவர்கள் ஏற்கனவே வேறு வழிகளில் திரைப்படக் குழுவினருருடன் அறிமுகமுடைய வர்களாக இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இந்தக் கட்டுரையை தீப்பந்தம் திரைப்பட விமர்சனத்தை எழுதும்பொருட்டே ஆரம்பித்தேன் ஆனால் படம்பார்க்கப் போனபோது எனது மனதில் எழுந்த ஆதங்கம் இப்படி எழுத வைத்தது. அடுத்த இதழில் திரை ஆய்வை எழுத முயற்சிக்கிறேன்.

# தன்முனைக் கவிதைகள்

**- ரேனுகா ஸ்டாலின் -**

*கணவன் மனைவியாக*
*இணைந்த நன்நாள்*
*புரிதலோடு வாழ்ந்ததால்*
*என் வாழ்வில் அது பொன்நாள்*

*எட்டுக்குள் ஏழு*
*அடங்கி விடுகிறது*
*எனக்குள் நீ நுழைந்து*
*அகலாதிருப்பது எப்போதோ*



*அகம்பாவம் எப்போதும்*
*அகத்தில் இன்றி அழித்திடு*
*இல்லறம் நல்லறமாகும்*
*என்பதை உணர்ந்திடு*

*உள்ளங்கள் இணைந்தால்*
*எண்ணங்கள் உயரும்*
*அன்பான வாழ்த்தில்*
*அகமெங்கும் குளிரும்*

*வாழ்க்கையில் வந்து போகும்*
*சின்னஞ்சிறு மகிழ்ச்சி*
*அனுபவித்து வாழ்ந்து வந்ததால்*
*தம்பதியர் மனதில் நெகிழ்ச்சி*

# சிறுகதை

## - ஆ. பாலசுப்பிரமணியன் -

சென்னையில் வசிக்கும் ரகுவரன் காயத்ரி தம்பதியரின் மகள் ரேவதி. இளங்கலை பட்டதாரி. வங்கிப் பணிக்காக வங்கித் தேர்வுகள் எழுதி வருகிறாள். ரகுவரன் மளிகை கடை நடத்தி வருகிறார். தனது மகள் ரேவதிக்கு வங்கிப்.பணி கிடைத்தால் நல்லதென்று, ரேவதிக்கு தேர்வுகள் எழுத ஊக்கமளித்து வருகிறார். ஒரு நாள் ரேவதி கோவிலுக்கு சென்றிருக்கும் போது, அங்கே வயதான பாட்டி ஒருவர் மயங்கி கீழே விழ, அவரைப் போய் பிடிக்க ரேவதியும், எதிர்முனையில் இருந்து பாலாஜி என்பவரும் விரைந்தனர். இருவரும் இணைந்த படியே தங்கள் கரங்களால் பாட்டியைதாங்கி பிடித்தனர். பின்னர் பக்கத்திலிருந்த கோவில் மண்டபத்தில் அமர வைத்து,தண்ணீர் தெளிக்க, பாட்டி மயக்கம் தெளிந்து சுயநினைவுக்கு வந்தாள்.

# மடை கடந்த மௌனம்

இருவரும் ஒருசேர பாட்டியிடம் என்னாச்சு என்று விபரம் கேட்க, சாப்பிடாமல் சாமி கும்பிட வந்து விட்டேன். பசி மயக்கம் ஆளை அசத்தி விட்டது என்றாள். பின்னர் பாட்டி இருவருக்கும் நன்றி கூறி விட்டு, எழுந்தாள்.

ரேவதி கைத்தாங்கலாக அழைத்து செல்ல, உடன் பாலாஜியும் பின்னால் சென்றான். பாட்டியும் பக்கத்தில் தான் என் வீடு. நான் போய் விடுவேன் என்று சொல்ல, இருவரும் மனம் கேட்காமல் பாட்டியுடன் சென்றனர். பாட்டியை அவர்கள் வீட்டில் விட்டிட்டு, இருவரும் கோவிலுக்கு திரும்பினர்.

அப்போது இருவரும் தங்களை ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து கொண்டனர். அன்றிலிருந்து கோவிலில் இருவரும் சந்திக்கும் போது பேசிக் கொள்வர். முதலில் நட்பாக ஆரம்பித்தது, முடிவில் காதலாக அரும்ப, இருவரும் தினமும் கோவிலில் சந்திப்பதை தங்கள் வழக்கமாக்கிக் கொண்டனர்.

பாலாஜி தான் முதலில் தனது காதலை ரேவதியிடம் கூறினான். ரேவதிக்கும் விருப்பம் இருந்ததால், அவனது காதலை உடனடியாக ஏற்றுக் கொண்டாள்.



ஏனென்றால் பாலாஜி படித்தவன். அழகாகவும் இருப்பதால், ரேவதிக்கு பிடித்துப் போய் விட்டது. பாலா ஜியும் இளங்கலை பட்டம் பெற்றிருந்தும் வேலைக்காக அலைந்து கொண்டிருக்கிறான் என்பதையும் தெரிந்து கொண்டாள் ரேவதி.

பாலாஜி நீ பெரிய இடத்து பையன். நான் நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவள். நம்ம காதலை உன் வீட்டில் ஒத்துக் கொள்வார்களா? என்றும் கேட்டாள் ரேவதி.

பாலாஜியோ நான் என்ன சொன்னாலும் எங்க வீட்டுல ஏற்றுக் கொள்வார்கள் என்றான். அதை அப்படியே நம்பிய ரேவதி, பாலாஜி மீது தீராத காதல் கொண்டாள்.

இதற்கிடையில் பாலாஜி வேலை தேடி பெங்களூருவுக்கு செல்வதாக ரேவதியிடம் கூறி சென்றான். சென்றடைந்ததும் சில நாட்களாக கைபேசியில் அழைத்து பேசியவன், பின்னர் ரேவதியுடன் பேசவேயில்லை.

ரேவதி மிகுந்த கவலை அடைந்தாள். பாலாஜிக்கு என்னாச்சுன்னு தெரியலையே என்று மனசுக்குள் புலம்பினாள். பாலாஜியைத் தொடர்பு கொள்ள ரேவதிக்கு வழி தெரியவில்லை.

இறுதியாக மனதைக் கல்லாக்கிக் கொண்டு, தனது காதலைத் துறந்திட முடிவெடுத்தாள். தன்னிடம் காதலைச் சொல்லி, இப்படி நம்ப வைச்சு ஏமாற்றி விட்டானே.

அவனைத் தேடிப் போய் திருமணம் செய்து கொள்ள வேண்டிய அவசியமுமில்லை. அதற்கு வாய்ப்புமில்லை. அதனால் அவனை மறந்து சந்தோசமாக இருக்க நினைத்தாள். இதற்கிடையில் ரேவதிக்கு சென்னையிலே வங்கிப் பணியும் கிடைத்திட, பாலாஜியை முற்றிலும் மறந்து போனாள்.

சில மாதங்களில் ரேவதிக்கும் வரன் தேட ஆரம்பித்தனர் அவளது பெற்றோர்.

ஒரு நாள் ரேவதி வேலை பார்க்கும் வங்கிக்கு பாலாஜி வந்தான் ஒரு பெண்ணுடன். அவன் ரேவதியைக் கண்டதும் பதற்றமடைந்தான்.

ரேவதியும் அவனைக் கண்டு கொள்ளாமல் தனது வேலையைச் செய்து வந்தாள். ஆனாலும் அவன் கூட வந்த பெண்ணை நோட்டமிட்டவாறே வேலை செய்து வந்தாள்.

அந்தப் பெண் பாலாஜியிடம் நெருங்கி பழகுவதையும் பேசுவதையும் பார்க்கும் போது, நிச்சயமாக அது பாலாஜியின் மனைவியாகத் தான் இருக்கும் என்று நம்பினாள்.

மேலும் பாலாஜி தன்னிடம் வந்து பேச வந்து விடுவானோ? என்றும் பயந்து நடுங்கினாள். தன்னை ஏமாற்றியவனை மறந்து, நிம்மதியாக வாழும் போது, மீண்டும் கண் முன்னே இப்படி வேறொரு பெண்ணுடன் வந்து நிற்கிறானே என்று தவித்தாள்.




ஆனால் பாலாஜியோ தலை குனிந்தவாறே, ரேவதியைக் கடந்து சென்றான். ரேவதிக்கு ஆத்திரம் பொங்கி வழிந்தது. . சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி என்பது போல, தன்னிடம் காதலைச் சொல்லி, ஆசை வார்த்தைகள் கூறி பழகியவன் இப்படி நம்ப வைச்சு ஏமாற்றிட்டானே? அதனால் தான் அடைந்த கவலைக்கு எல்லையுண்டோ?

தனது தவிப்பை வீட்டிலும் சொல்ல முடியாமல், மனசுக்குள் வைத்தே பொங்கியதை நினைத்துப் பார்த்தாள். அவன் சட்டையைப் பிடித்திழுத்து நாலு அடி சாத்தி, நியாயம் கேட்க வேண்டும் என்ற கோபத்தில் எழுந்தாள் ரேவதி. ஆனால் ரேவதியோ மடை கடந்த மௌனம் போல் சாந்தமானாள்.

இனிமேல் நியாயம் கிடைத்து என்ன பயன்? அவனுக்கு தான் திருமணமாகி விட்டதே என்று அமைதியானாள். அதனால் பாலாஜி பிழைச்சு போகட்டும். அந்தப் பெண்ணின் வாழ்க்கையை நாம் கெடுக்கக் கூடாது. அவனுடன் சண்டை போட்டு, தனது மானம் மற்றும் மரியாதையும் இழந்து விடக் கூடாதென்று அமைதியானாள்.

மேலும் அவனை அவமானப்படுத்தி இனி நமக்கு என்ன பயன்? அவன் வாழ்க்கையை நாம் கெடுக்கக் கூடாது. நான் அவனுக்கு துரோகம் செய்யவில்லை. அவன் தான் எனக்கு துரோகம் இழைத்திருக்கிறான் என்று மனதைத் தேற்றிக் கொண்டாள்.

ரேவதியின் மடை கடந்த மௌனத்தால் பாலாஜியும் தப்பித்துக் கொண்டான். ரேவதியை வங்கியில் பார்த்ததும் அவனது மனசுக்குள்ளும் சற்று பயம் இருந்திருப்பதாகவே ரேவதி உணர்ந்து கொண்டு, அவனை மன்னித்து விட்டு, தனது இருக்கையில் அமர்ந்து தனது பணிகளைச் செய்ய ஆரம்பித்தாள்.

**முற்றும்**

## ஹைக்கூ கவிகள்

- ரேஸ் -



வசந்த காலம்

காற்றில் வானுயர்ந்து செல்கிறது

நெகிழிக்கடதாசிப் பட்டம்

பந்து உதையில்

எல்லை கடந்து செல்லும்

இலக்கு (கோல்) காப்பாளர்



# பாவலர்களுக்கு மதிப்பளிப்பு




**அ**ண்மையில் 22 ஆனி 2025 அன்று பாவலர்கள் பலர் மதிப்பளிக்கப்பட்டு அவர்களின் சாதனைக் கமைவாக பட்டம் வழங்கும் நிகழ்வு யாழ் நகரின் புனித பூமியாகிய நல்லூரில் இடம்பெற்றது. பாட்டரசர் கி. பாரதிதாசன் அவர்கள் இந்த விழாவிற்கு தமையேற்று அவரவர்க்கான பட்டங்களையும் வழங்கி வைத்தார். இந்த நிகழ்வில் ஈழம், சுவிற்சலாந்து மற்றும் தென் இந்தியாவையும் சேர்ந்த பல கவிஞர்கள் மதிப்பளிக்கப்பட்டு பட்டம் பெற்றனர்.

சிறப்புற இடம்பெற்ற இவ்விழாவில் இரு வேறுபட்ட பட்டங்கள் பாவலர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன. அத்தோடு இது முழுக்க முழக்கு மரபுக் கவிஞர் களுக்கான சிறப்பு நிகழ்வாகவே அமைந்திருந்தது. இந்த இருவேறு பட்டங்களில் ஒன்று, பாவலர்மணி பட்டம். இந்தப்பட்டமானது ஆயிரம் விருத்தங்களை எழுதி முடித்தவர்களுக்கு வழங்கப்பட்டது. மற்றய பட்டம் பாவலர் பட்டம். இது 500 விருத்தப்பாக்களை எழுதி முடித்த கவிஞர்களுக்கு வழங்கப்பட்டது. இதில் எமது சஞ்சிகையின் நிரந்தர ஆளுமையும் பாவலரு-மாகிய **உடுவிலூர்க்கலா** அவர்களும் 1000 விருத்தப்பாக்களை எழுதி முடித்து **பாவலர்மணி**



பட்டம் பெற்றமை பெருமைக்குரியதே. அவரை இரவி சஞ்சிகையின் ஆளுமைகள் குழு உளமார வாழ்த்துகிறது.

பாவலர்மணி பட்டம் பெற்ற ஏனைய கவிஞர்கள் வரு-மாறு

செ. அன்புராசா

மாலினி கென்னடி

வெற்றி மகன்

வில்லூர்ப்பாரதி - திருகோணமலை

செபா சவிரிமுத்து - கொழும்பு

சீதா வேள்வன் - திருகோணமலை

சீராளன் - திருகோணமலை

அதேபோலவே பாவலர் பட்டம் பெற்றவர்களின் விபரம் வருமாறு

மு. சிவகுமாரன் - சுவிற்சலாந்து

பத்தக்குட்டி மதிபாலசிங்கம் - திருகோணமலை

ரகபாலா வசந்தி

தயாளினி சிவநாதன்

தாமரைச் செல்வி - கொழும்பு

ஜெயசக்தி பிரபாகரன்

தமிழ்ச்செல்வி - இந்தியா




மைதிலி தயாளன் - இந்தியா ஆகியோராவர்

அத்தோடு எமது நாட்டின் தமிழ் ஆளுமைகள் பலர் உயாிய கம்பன் விருது வழங்கப்பட்டு மதிப்பளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மிகச் சிறப்பாக இடம் பெற்ற இந் நிகழ்வில் பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம் பெற்று விழாவிற்கு மேலும் அழகும் வலுவும் சேர்த்தமை சிறப்பான அம்சமாகும்.



‘இரவி’ சஞ்சிகை

மென் மேலும் வளர்ச்சிபெற்று

காலகாலத்துக்கும்

சிறப்பான படைப்புகளை தாங்கி வெளிவந்து

வாசகர்களை மகிழ்விக்க வேண்டுமென

உளமார வாழ்த்துகிறோம்…….

